உ

சிவமயம்.

பிரம்மோபநிடதம்.

இஃது

பிரமசர்க்கையின் இறுதியிலுள்ளது.

மூலபாடம், அதிகபாடம், பொழிப்புரை,

விசேஷவுரைகளுடன்

—(*)—

சிதம்பரம் பிரம்மவித்தியா பத்திராதிபரான

பரசமய பஞ்சானன பண்டிதபாஞ்சஜன்னிய

ப்ரம்மஸ்ரீ.

கு. ஸ்ரீநிவாசதீட்சிதர் அவர்களால்

—*:o:*—

தமது

நடுக்காவேரி ஜகத்குருயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1898 ௵

ப்ரம்மோபநிஷத்துக்கு அநுக்ரமணிகை.

	பக்கம்.
அக்நிஸ்ரீவா	௨௨
அஸ்யஸ்வப்நாவஸ்த	௧
ஆகாஶசரீரம்	௩௩
இதம் யஜ்ஞோபவீதம்	௨௫
ஊர்ணநாபிர்யதா	௪௨
ஏகோ தேவ:	௨௯
ஏகோ வஶீ	௩௨
கர்ணிகாயாம்	௨௩
ஜ்ஞாநஶிகிந:	௨௬
தத்த்வதர்ஶிந:	௩
திஷ்டந்தி தேவதா:	௩௯
தாரணாத்தஸ்ய	௨௬
ந தஸ்ய தேவா:	௭
நாபிர்ஹ்ருதயம்	௨
நேத்ரஸ்தம்	௪௫
ப்ரஜாபதி:	௮
பஹிஸ்ஸூத்ரம்	௨௬
யஜ்ஞோபவீதம்	௬௨
யதோ வா இமம்	௪௮
யஷ்டிவிநாஶநம்	௬௮
ஶிகாஜ்ஞாநமயீ	௨௪
ஸர்வவ்யாபிநம்	௩௧
ஸஶிகம் வபநம்	௬௯
ஸூசநாத் ஸூத்ரம்	௬௭
ஸூத்ரம் தத்	௨௧
ஸ்வயம் நஷ்டம்	௪
ஹ்ருதி ஸ்வேததேவ	௯
ஹ்ருதிஸ்தா தேவதா:	௯

28

ஆகவசனங்கள்.

முகவுரை.

பிரமோபநிடதமென்பது பிரமசாகையென்னும் கிருஷ்ணயஜுஸின் ஓர் சாகையி னிறுதியில் நான்கு கண்டங்களாயுள்ள உபநிடதம். இதிலிரண்டாவது கண்டமுதல் மூன்று கண்டங்களை யுரைகாரால் வியாக்கியானஞ் செய்யப்பட்டது. சிலருரைகளில் இந்த முதற்கண்ட முபநிஷத்தாகவே வியாக்கியானஞ் செய்யப்பட்டிருக்கிறது. யாமும் பலர்போன வழிபற்றி யிரண்டாங்கண்ட முதலே விரிந்தவுரையிட்டோ மாயினும் பாராயணஞ்செய்வோர் சௌகரியத்துக்காகவும், விஷயப் பொருத்தமறிந்து பிரமவிசாரஞ் செய்வோர் சௌகரியத்துக்காகவும், இவ்வுபநிடதம் நான்கு கண்டங்களை நூலின்முகத்திலமைத்தும், முதற்கண்டத்து மந்திரங்களுக்குத்தமிழிற் பொழிப்புரையிட்டும் வெளியிட்டோம். இப்புத்தகமச்சிடுதற்கெமக்குக் கிடைத்த சாதனங்கள் வருமாறு.

(1) இப்புத்தகம் சுமார் இருநூறுவருடங்களுக்கு முன்னெழுதப்பட்ட பழையவேட்டுப்பிரதி. பிரமோபநிடத முதலிய நூற்றெட்டுபநிடதங் களடங்கியது. தென்னாட்டின் மிகக் கீர்த்தி பெற்றுப் பிரமகைவல்யம்பெற்ற ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசாரிய ஸ்ரீ சுயம்பிரகாச சுவாமிகளது புஸ்தககோசத்திற் சேர்ந்தது.

(2) மாயூரத்தில் காலஞ்சென்ற தாசில் ம-ா-ா-ஸ்ரீ. வெங்கடரமணஐயர் அவர்களால் நாற்பது வருஷங்களுக்கு முன் கிரந்தாட்சரத்தி லெழுதப்பட்ட புஸ்தகம்.

(3) சென்னையில் தெலுங்கெழுத்தில் காலஞ்சென்ற சித்தாந்தி சுப்பிரமணியசாஸ்திரிகளால் அச்சிடப்பட்ட அஷ்டோத்தர சதோபநிஷது.

(4) ஜீவானந்த வித்யாஸாகரரால் கல்கத்தாவில் பாஷியத்துடனச்சிடப்பட்ட புஸ்தகம்.

(5) ஆநந்தாசிரமத்தில் புனவில் பாஷியத்துடன் அச்சிடப்பட்டது.

மேற்கண்ட புஸ்தகங்களையும், ஆங்காங்கு வேண்டியவரை ஸ்ரீ காஞ்சீபுர நகரத்தி லெழுந்தருளிய ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ மதுபநிஷத் பிரமேந்திர சுவாமிகள் அருளிச்செய்த அஷ்டோத்தர சதோபநிஷது வியாக்கியானத்தையும், ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமத் வித்யாரண்ய சுவாமிக ளியற்றியருளிய முப்பத்திரண்டுபநிஷத வியாக்கியானங்களையும், ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமத் சங்கரானந்தசுவாமிக ளருளிச்செய்த வியாக்கியானத்தையு மநுசரித்து இத்தமிழுரை செய்யப்பட்டது. இதற்கு எம்மாலேயே வடமொழியில் ஓர் வியாக்கியானஞ் செய்யப்பட்டிருக்கிறது. இதில் இரண்டாவது கண்ட முதல் வியாக்கியானஞ் செய்தது பழையுரையாசிரியர்கள் சென்றவழிபற்றியே.

ஐதரேயாரணியகத்தில் இரண்டாவதாரணியகம், ஒன்று, இரண்டு, மூன்று, அத்தியாயங்களும், உபநிடதபாகங்களாயிருந்தும், அவற்றையும் மேல்மூன்றாவதாரணியக முற்றும் உபநிஷத்பாகமாயிருக்க அதையும்விட்டு இடையேயுள்ள நான்கு, ஐந்து, ஆறு, அத்தியாயங்களை மட்டுமுபநிடதங்களாக ஸ்ரீ லோக குருஸ்வாமிகள், ரங்கராமானுஜாசாரியர், ஆனந்ததீர்த்தாசாரியார், ஸ்ரீசங்கரானந்த சுவாமிகள், ஆகிய எல்லோரும் வியாக்கியானஞ் செய்தாற்போலவும், (சாயனாசாரியார் என்றவித்யாரண்ய சுவாமிகள் முற்றும் வியாக்கியானஞ் செய்தார்) கேனோபநிடதமாகிய தலவகாரபிராமணம் ஒன்பதாவது அத்தியாயத்துக்கே மேற்கண்டவர்கள் உபநிஷத்தாக வியாக்கியானஞ் செய்ததுபோலவும், (பலதேவர் எட்டாவது அத்தியாயத்தையும் உபநிஷதமெனக் கொண்டார்.) வாஜஸநேய பிரகதாரணியகத்தில் மூன்று மத்தியாய முதலே வியாக்கியானஞ்செய்தாற் போலவும், (உவ்வட்டாசாரி

யார், மகீதராசாரியார் ஆதிமுதல வியாக்கியானஞ்செய்தார்கள்) தைத் தரீயாரண்யகத்தில் பத்தாம் பிரச்னத்தையு முதலாறு பிரச்னங்களையுமொழித்த இடையிலுள்ள வற்றுக்கே வியாக்கியானஞ் செய்தாற்போலவும், (சாயனர், பாஸ்கரர் முதலியோர் வியாக்கியானம் செய்தார்கள்) என்க. இவ்விதம் ...ற்குக்காரணம் ஐதரேயாரண்யகத்தில், திரிதீயாரண்யக ... யாரம்பத்தில் விரிவாய் நிரூபித்திருத்தலால் அங்கே காண்க.

துரீயதத்துவ நிரூபணப்பிரகரணங்களில், ஸ்ரீகண்டாசாரி யர், பவதேவர், ஸ்ரீமத் தீட்சிதரவர்கள் முதலிய பெரியோர்கள் இவ்வுபநிடத வசனங்களை யெடுத்து வழங்கியிருக்கின்றார்கள். ... காலத்தில் உபநிடதங்களுக்குப் புதியபாடமொன்று செய்த ... நிடதங்களையப் பிரமாணமெனக் கொண்ட தாந்திரிகரும் இவ்வுப நிடதத்தைப் பிரமாணமெனக், கொண்டு தமக்குச் சாதகமெனச் சில வாக்கியங்களை யெடுத்திருக்கிறார்கள். இவ்வுபநிடதம் பரமா த்வைதத்தில் தாற்பரியமுள்ளது. மாண்டூக்யத்தைப்போல பிரண வ வித்தையை அதன் முக்கியாதிகாரமான ஸந்நியாஸிமுகத்தால் நிரூபித்து மூவவத்தைகளுங் கடந்த சுத்தான்மசொரூபத்தையே பிரமமென நிரூபித்துப் பரமாத்வைத சித்தாந்தத்தை ஸ்தாபிக்கி ன்றது.

இவ்வுபநிடதம் பிரமசாகையைச் சேர்ந்தமையாலும், பிர மத்தைக் குறிப்பதாலும், இறுதியில் தமக்கு இதேபெயரிட்டுத் தாமே வழங்கினமையாலும் பிரமோபநிடதமெனப்படும்.

இதற்குத் தமிழுரையெழுதுவதில் புஸ்தகவழியிலுபகாரஞ் செய்த க்ஷேத்திரபாலபுரம் பிரமஸ்ரீ வெங்கட்டராமசிவனவர்களுக் கும், மாயூரம் பிரமஸ்ரீ சுப்பிரமணியஐயரவர்களுக்கும் தமிழ்விஷ யத்தில் முக்கியவுதவிபுரிந்த ஸ்ரீ அ-சிவானந்தசாகரயோகீசுரருக் கும் என்றும் எமது நன்றியைச்செலுத்தி வருவோமாகவும்.

கல்விகேள்விகளிற் சிறந்த பெரியோர் இதிலுள்ள குற்றங்களை நீக்கிக் குணங்களைக்கொண்டு, யாமெடுத்த இம்முயற்சி நீடூழி நிலைபெறுமாறு அநுக்கிரகிக்கும்படி பிரார்த்திக்கின்றேம்.

இங்ஙனம்-

கிரந்தகர்த்தா.

உ

ஓம் ஶ்ரீஶிவாய குரவே நம:

கைவல்யோபநிஷத்

ஓம் ॥ ஸஹ நாவவது ஸஹ நௌ புநக்து ஸஹ வீர்யம் கரவாவஹை தேஜஸ்வி நாவதீதமஸ்து மா வித்விஷாவஹை ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ॥

ஓம் ॥1॥ ॥2॥ ஶந்நோ மித்ர: ஶம் வருண: ஶந்நோ பவத்வர்யமா ஶந்ந இந்த்ரோ ப்ருஹஸ்பதி: ஶந்நோ விஷ்ணுருருக்ரம: ॥3॥ விஷ்ணுராதிவ்யூஹஸ் ॥4॥ ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தஶ்ரவா: ஸ்வஸ்தி ந: பூஷா விஶ்வவேதா: ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: ஸ்வஸ்தி நோ ப்ருஹஸ்பதிர்ததாது ॥ அதாஶ்வலாயநோ பகவந்தம் பரமேஷ்டிநமுபஸமேத்யோவாச । அதீஹி பகவந் ப்ரஹ்மவித்யாம் வரிஷ்டாம் ஸதா ஸத்பி: ஸேவ்யமாநாம் நிகூடாம் ॥5॥ ஸ்வஸ்தி ப்ரஹ்ம ...

॥ 1 ॥ கைவல்ய ... ஆதியில் அதிபாடம் உண்டென்று நாராயணபட்டர்.

॥ 2 ॥ இதுமுதல் மேல்காட்டப்படும் புஷ்பம் வரையில் ஶ்ரீ சங்கராநந்த சுவாமிகள், வித்யாரண்ய முனிகள், உபநிஷத் ப்ரம்மசுவாமிகள் இவர்கள் வியாக்யானங்களில் இல்லை. பட்டநாராயணர் தீபிகையிலும் மற்றுமுள்ள சிலமூலங்களினும் காணப்படுகிறது. தென்னாட்டுப் பிரதிகளின் பாடப்படியே நமது வியாக்யானம். ஆயினும் வேறுதேசப்பாடப்படிக்கும் உள்ளமந்திரங்களைப் பாராயணத்துக்காக பேரட்டுக்காட்டுவதுமன்றி அவற்றிற்குப் பொழிப்புரையும் சேர்த்திருக்கின்றோம்.

॥ 3 ॥ விஷ்ணுராதி என்றும் சிலவிடத்துப் பாடம்.

॥ 4 ॥ ஸ்வஸ்தி ... டி.

॥ 5 ॥ ஸ்வஸ்தி ப்ரஹ்ம ... டி.

ரம் யஸ்ய ப்ரஸிஹாதி ஸந்யத்ர ப்ரயோகராஜாநம் || ரோக்ஷிகவ
தூர்யாரோக்ஷிகெகநதம் தாநராஜாஶம்விக்ஷிபதிதநாவக்ஷ
திகமெஷெவஷவ்யாணெர்யத்யாதிஸம்வ்ருஷ்டரோக்ஷுஷ்ரா
ஸ்ஸ்கஸ்த்ரா ஸ்ய்ரா நர்ஸ்ர் ஸ்வஷிவெ ஶாஸ்த்ர நாகாமவக்ஷ
யுர்மெந் ஸ்ர் நரோ ஸ்ரீ தர் யாதிஸ்வரோபயெவம்ஸ்வஷ்டவெள
ஸ்ரமே ஶ்ரயெயெஷெதவததோக்ஷயஷ்டிராஸவிர்ராஸ்ரோநொநய
ஜெஸ்ரஷ்ட்யாயைவெர்ஶ் மஹாமமெஹநர்விவ்ரதய
யாசாரொநிஷ்டாரோ க்ருநஜோவயாதி தமெமெஷெவஷெதவ
தஶ் ||௨|| ஸ்வஸ்வ க்ருநதஜியாதிவெத ஷவவாம் ஜெஸ்ரதி
ஜெஸ்ராதிஷ்டாரொர ஜெஸ்ரதிராநம்தயெத ஹயமெ ஹெந
வஸ்யாயமத்தி ஜமெளகாவதர் யாஜமெளகாஹ ரஹ ம் ந
யத்ராதாநம் நபதிவாம் ஸம்யபதாம் நாவாம்தர்ஜதி
ஸ்ஜாஹதஹிபீயதயமெயெவெஷிக பாஶாஷக்ஷஸஷயதி த
ரெவக்ஷநஜவ || ௩ || ஶம்வெதயெதெவயொநிஃ யதஜாஹ
திமாஹாமாஹம் நிராக்ஷரோஸர்தெவஸ் ஷஸம்வ்ரஸாரொரா
ஷயராஸ்ம்ஃ ககடிகஃ வாஷ்ராஃ வராஷிஃ வ்யாணொம்
ஹிஸாவ்யாவாம் ஶ்ஹ | க்ருதாதெவராவெத யதி யஷவம்
வெத ஸ்வவாம்ஸ்ஹபாரொக்ஷதஜராவெதி ||௧|| கயாஸ்ர
வாமஷவர்வக்வாரீஷ்யாநாநிஹவந்தி | நாஹிஹஜயம் கணம்
ரஶ்யாவ | தத்ரவதஷாதம் ஶ்ஹவிஹாதி ||௪|| ஜாமரி

||௧|| யஷ்டிராஜிநா ஷை
||௨|| ஸ்வஸ்யாந க்ருநஜ ஷை
||௩|| ஶம்பதவஷே ஷை

||௧|| இதுமுதற்றான் அநேக வ்யாக்யானங்கள்.
||௪|| இந்த வாக்யம் அதிக பாடமாக வடநாட்டுப் பிரதிகளில் காணப்படுகிறது. ஆயினும், அது தென்னாட்டிலும் படிக்கப்பட்

தம்ஸ்வம் ஸாஷாத்வம் தாரீயதீதி | ஜாமஹிநேத்ஸ்வாஹாஸ்
வெவிஷ்ணா: ||கக|| ஸாஷாவெள்ராத்ஸ்வாரீய ||க௨|| ஐ
க்ஷரம் ||ச௩|| ஸக்ருதிநேத்ராவிஷ்ணாநேஸ்வஸ்வரஸ்வ ||க௪|| ஸ்வ
ஐஐநஸ்ஐநேஸ்ரத்ரூஐவேர்ணிவாதம் ஜெஜ்ராதீவிஷூதம் ||க௫||
யத்ர ஜொகாநஜொகா தேவநதேவா வெதாநவெதாயஜ்ஞா
நயஜ்ஞா ஊதாநஊதாவதா நவிதாஸ்வாஷாநஸ்வாஷாவர்ணா
ஊநவர்ணாஊ: வெளஷ்வஸாநவெளஷ்வஸ: ஸ்ரஐணாந
ஸ்ரஐண ||க௬|| ஷாவஸாநதாவஸ: ஐதேத்ர கஐவ்தத்
ரம் ஷ்யூஹவிஹாதி ||க௭|| நிவர்த்ரணம் ||க௮|| நதத்ரஜொ
தேவாஜஷய: விதாரம்ரம்ஸ்நேதவதிஷ்ஜ: ஸவர்விநேத்
தி |ஹ்ருதிஷாநேவதாஸ்வர்ர:ஹ்ருதிவர்ணா:ஷ்யதிஷிதா:ஹ்ரு

டே ஏதோகாரணத்தால் கோசங்களில் விடுபட்டிருக்கவேண்டும். அவ்வாக்யத்துக்குப் பொருட்பொருத்தம் பூர்ணமாக விருத்தலால்-

|| கக || ஸாக்ஷாத்வே ஷை

|| க௨ || வாராக்ஷரம்|| என்றும் வாரக்ஷரம் என்றும்பாடமுண்டு.

|| க௩ || ஸக்ருதித்ஸ்வஸ்வாஷாஸ்வவிஷ்ணா: ||

|| க௪ || ஸக்ருதித்ர ஸ்வவிநேஸ்வஸ்வரஸ்வஸ்வாராஷாஸ்வரணா: ஸஜீவஸ்வஹ்ராமி: வெஸ்வரஸ்வஜாஹ்ருத்தேஷாம் ஐயெத்ரயத்
ரம் ஷ்யூஹவிஹாதி ||

|| க௫ ||நதத்ரஜொகா:|| என்பது சிலவிடத்துப் பாடம்.

|| க௬ || வஸ்வோநவ்ஸ்வ: || அதிக பாடம் நாராயணீயம்

|| க௭ || நிவர்த்ரணம் நாராயணீயம்.

|| க௮|| ஹ்ருதிர்காநேரதஷிஜாநஊகாரம்தத்ஸ்வஷிரஊகா
ரம்தநேஜர்த்ர• ஹ்ருதிர்காரம்யவிநிஷம்ஸம்ஜாதி விவரதிய

ஷிவ்ராணஶ்சஜ்ஜ்ராதி ஶ்ருதிர்வ்யஸ்தமத்ரம்ச ॥கக॥ தத்வந: ஸ்ர
ஷ்டேச தஸேந்த்திஷ்டதி । யஜ்ஞோபவீதம் பரமம்பவித்ரம் ப்ர
ஜாபதேர்யத்ஸஹஜம் புரஸ்தாத் । ஆயுஷ்யமக்ர்யம் ப்ரதிமுஞ்ச
ஶுப்ரம் யஜ்ஞோபவீதம் பலமஸ்துதேஜ: । ஸம்வஸ வஸ
நம்க்ருத்வாபஸவ்யமந்த்ரம் த்ரிஜப்யய: । யதக்ஷரம் பரம்ப்ர
ஹ்ம தந்மந்த்ரமிதியாசயேத் । ஸம்வநாத்மந்த்ரமித்ராஹ: ஸம
த்ரம்நாமவாரம்பக: । தஸ்மாத்ராவிதிதம் யேநஸவிவேரவே
தபாரக: । யேநஸவத்திகம் வேரதம் ஸம்மேத்ரேணிமண்ட
ஜ்வ । தந்மந்த்ரம் யாரயேத்ராமீயோம விதக்வதஶிஷ்யாந்
ப்ரஹ்மஸமந்த்ரம் த்ரிஜபிபாரேந்ராமமந்த்ரமாஶ்ரிதம் । ப்ரஹ்ம
ஸ்வநிஶ்வம் ஸமந்த்ரம் யாரயேந்நோம்வேதந: । யாரணாத்ரஸ்ர
ஸமந்த்ரஸ்யநோத்ஸ்ஷோ நாமாஹ்வயேஷ । ஸமந்த்ரஶேஷி
கம்யேஷாம் ஜ்ஞாநயஜ்ஞோபவீதிநாம் । தவேவஸமந்த்ரவிதோ
ஜோகேஷுச யஜ்ஞோபவீதிந: । ஜ்ஞாநஶிவிநோஜ்ஞாநநிஷ்டா
ஜ்ஞாநயஜ்ஞோபவீதிந: । ஜ்ஞாநமேவபரம் தேஷாம் பவித்ரம் ஜ்ஞா
நமுச்யதே । அக்நிரிவஶிகாநாந்யாயஸ்ய ஜ்ஞாநமீஶிகா
ஸஶிகீத்யுச்யதே தவிதா நேதரேகேஶயாரிண: । கர்ம
ண்யதிக்ருதாயேது வைதிகேப்ராஹ்மணாதய: । தைஸ்ஸ
யார்யமிதம் ஸமந்த்ரம் க்ரியாங்கம் தத்வைஸ்ம்ருதம் । ஶிகா
ஜ்ஞாநமயீயஸ்ய உபவீதம்ச தந்மயம் । ப்ராஹ்மண்யம் ஸகலம்தஸ்
யஇதிப்ரஹ்மவிதோவிது: । இதம் யஜ்ஞோபவீதந்து பரமம்ய
த்பராயணம் । ஸவித்வாந்யஜ்ஞோபவீதீஸ்யாத்யஜ்ஞ ॥உ०॥ ஸம்

ஸ்திதம் ஸவஶோகம் ப்ராதம் ॥ ஸம்வித்மோ: ப்ரஜாஜ்ஞாயே
ரஶ॥ நாராயணீயத்தில் அதிகரணம்

॥ கக ॥ யந்த்ரக - நாராயண சங்கரபாடம்.

॥ உ௦ ॥ ஸம்யஜ்ஞிநம்விதர்ஷ்டை ... யஜ்ஞவிஷ இதுநாரா

[illegible]

[illegible]

[illegible]

பணியபாடம்.

|| ௨௧ || [illegible] || நாராயணர் சங்கரர் பாடம்.

[illegible]

ஓம் ஶௌநகோ ஹ வை மஹாஶாலோ(அ)ங்கிரஸம் பகவந்தம்
பிப்பலாதம் பப்ரச்ச

(இதன்பொருள்.) ஓம் (க) மஹாசாலனை சௌநக முனிவர் ஆங்கிரஸ் கோத்திரத்தில் பிறந்த பிப்பலாத பகவானைக் கேட்டார்.

திவ்யே ப்ரஹ்மபுரே ஸம்ப்ரதிஷ்டிதா பவந்தி கதம் ?

(இ — ள்.) திவ்யமாய் மனோஹரமாயுள்ள (உ) பிரம்ம புரத்தில் (௩) இவைகள் எப்படி நிலைபெற்றன. ?

ஸ்ருஜந்தி ?

(இ — ள்.) எப்படி தத்தம் விஷயங்களைக் கவருகின்றன ?

கஸ்யைஷ மஹிமா பபூவ ?

(இ — ள்.) இப்பிரம்மாதி பிரபஞ்சம் எவனது மகிமை ?

யோ ஹ்யேஷ மஹிமா பபூவ ஸ கதம: ?

(இ — ள்.) எவன் இவ்வளவு மகிமை பெற்றவனென்ன் அவன் யாவன்? (என்று)

தஸ்மை ஸ ஹோவாச ப்ரஹ்மவித்யாம் வரிஷ்டாம் ॥

[இ — ள்.) அவருக்கு அவர் உத்தம பிரம்மவித்தையை உபதேசித்தார்.

ப்ராணோ ஹ்யேஷ ஆத்மா
ஆத்மநோ மஹிமா பபூவ ॥

இ — ள். பிராணனே அன்றோ இவ்வாத்மா ஆத்துமாவின் மகிமையே ஈதெல்லாம்.

ஒஷவா.நாஒய-ஹ ஒஷவா.நாம நியநஒநியநு||

இ — ள். அவனே தேவர்களுக்கும் ஆயுளாயுள்ளவன் அவனே தேவர்கள் ஒடுங்குமிடம் பிறக்குமிடமுமாம்.

திவெ்ஹ வெ ஹவ வ விரஜம் நிஷ்லம் ஹ

உக்ஷம் யஹ் ஹவஹாதி ஸநியஹதி||

(இ — ள்.) (ச) திவ்யமான (ரு) பிரம்மபுரத்தில் எந்த (சு) விரஜமானதும் (எ) நிஷ்களமானதும் (அ) சுத்தமானதும் (கூ) அக்ஷரமானதும் (ய) பிரம்மம் பிரகாசிக்கின்றது அதுவே (கக) நியமிக்கின்றது.

உய-ஹகாரா நஉாக்ஷீகவக

(இ — ள்.) (கஉ) மதுகரராஜாவை (நியமிக்கின்றான்) (கங) மாக்ஷீகந்தைப் போல

யஹாஉாக்ஷீகெகெ நதஙெ-நாஜாலம்

விக்ஷிவ கிதெ நாவகஷதி| தஒெயெவெஷ

யஷாயாதிவஹஹஷ உாக்ஷஷ

(இ — ள். எங்ஙனம் (கச) மாக்ஷிகை, ஒரு நூலால் வலையை உண்டாக்குகிறது (எப்படி ஒரு நூலால்) ஒடுக்கிக்கொள்ளுகிறது இப்படியே (கரு) பிராணனும் எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டே (கசு) செல்லும்.

ஹாணஒஷவதாஹாஹவ நாவஹ் ஹவெ

ஶெஹ நாகாஶவ||

(இ — ள். (கஎ) பிராணா தவதைகளான எல்லாநாடிகளும் (கஅ) நல்ல நித்திரையில் (கசூ) சியேனாகாசம் போலாம்.

யயாவஂஸெஹ நஉாஸ்ரீ கூயாதிஹஉாவயஒெவஹஷ வ

(இ — ள்.) எங்ஙனம் (கசு) சியேனம் ஆகாயத்தை யடைந்து (உ0) தனதுவ் தானத்தைப் பெறும் இப்படியே (உக) நித்திரையடைந்தவனும்.

ஹூலெத்து யவெஷவெவஹ டெஹவஉலிஹீதா யஷூர்ஹிநா

தாஷூஹ்ரீநோ நயதி யைவஹிஷூாவவெஜெதிுநவிஷு

தெ ||

(இ — ள்.) (உஉ) சொல்லுகிறுன் எங்ஙனம் தேவதத்தன் தடி முதலியவற்றுல் அடிக்கப்பட்டும் அறிவதில்லை; இங்ஙனமே இவனு (உஙு) இஷ்டா பூர்த்தங்களால் கட்டுப் படமாட்டான்.

யயாகூமாரொவாநிஷூாமகூநஜமேவ யாதி

தவெயெவெஷெதஹவஉதூஸ்வெஷூநஜ

ஊவியாதி ||

(இ — ள்.) எங்ஙனம் (உச) காமனைகளில்லாத (உரு) குமாரன் ஆனந்த மடைவான் அங்ஙனமே தேவதத்தனும் (உசு) சொற்பனத்தில் ஆனந்தமடைவான்.

வெஹவவவாஂஜெ்யாதிஂஜெ்யாதிஷூாமொஜே்யா

திராநஜயதெ ||

(இ — ள்.) அறிவே பரமசோதியாம்; அதையடைய விரும்புவானை அச்சோதியே (உஎ) ஆநந்தமடைவிக்கும்.

ஹஷயஷெதவெநவஹவாயயஹதிஜெளகாவக ||

(இ — ள்.) மேலும் (உஅ) அவ்வழியிலே சொற்பனமடைவான் (உகூ) ஜலூகைபோல

யயாஜஷகொமம்ஹ்ரூஂநய_ஹ்ருீதூரநஂநயதி,

வாஂஷஂயயவதாஂநாவாஂதஜதி

வஜாஹதூஹியீயதெ ||

(இ — ள்.) எங்ஙனம் (கய) ஜலூகை ஓர் புல்லின் தலையி னின்று மற்றதைப் பற்றியே தன்சரீரத்தைச் சேர்த்திடும்; மற்ற தைபற்றியே முன்னதைவிடும்; இங்ஙனமே ஜீவன் வேறு அவஸ் தையைத் தொட்டே இவ்வவஸ்தையை விடுவான்- அவன் தூங்கி ஞன்; விழித்தானெனப் படுவான்.

யதெயெவெஷகவாஜாஷகாயாபயதி॥

(இ — ள்.) எங்ஙனம் இவன் (கக) எண் கபாலங்களைத் தரிக்கிருன் அப்படியே.

தவெவஷநஜவாவஜுபெதவெஷதெவயொகி॥

(இ — ள்.) (கஉ) அவனேயே ஏது (கங) ஸ்தானம்போல் தூங்குகிறது. அதுவே (கச) வேததேவயோகியாம்.

யத்ஜாகுகிமஹாமஹம்நிஷு॥

(இ — ள்.) எங்கு (கரு) விழித்தவனுக்குச் கபாலகபாலங் கள் (கசு) சொல்லப்பட்டன.

(இ — ள்.) இத்தேவன் பெருமையே அந்தர்யாமி

வஜ ககஃடு வஷ வாஷ வுாணொஹிவஷ

வாவாவஜுஹாதாஜெவதாவெஷயதி॥

(இ — ள்.) அவனே (கஎ) பக்ஷி; அவனே (கஅ) நண்டு அவனே (கசூ) தாமரை; அவனே (உய) புருடன்; அவனே (உக) பிராணன்; அவனே (உஉ) ஹிம்ஸை (உங) பராபரப்பிரம்மமும் அ வனே அவனே உச ஆத்துமா அவனே உரு தேவதை என் று வேதங்கள் சொல்லுகின்றன.

யவஷவெஷவஷவஷாஜூஹயாகெ

ஜஜஉவெதி

இ — ள். இங்ஙனம் எவ உசு னறிவான் அவன் உஎ பரப்பிரமதாமாகான உஅ க்ஷேத்திரஞ் ஞனயடைவான்.

குறிப்புகள்-

1. பெரியசாலையென்ற ஆசிரமமுடையவன்.
2. சரீரத்தில்.
3. வாக்கு முதலிய இந்திரியங்கள்.
4. தேவதாத்யானஸ்தானம்.
5. சரீரத்தின் உட்புறத்துள்ள இதயம்.
6. ரஜோகுணங்கடந்தது.
7. அம்சமில்லாதது பூர்ணம்.
8. எவ்விதப் பற்று மில்லாதது.
9. பிரதானத்துக்கும் ஜீவனுக்கும் மேலாயது.
10. ஈசுவர சொரூபம்.
11. ஆளுகின்றது.
12. இந்திரியங்களின் அரசனான ஜீவனை.
13. ஈக்களைக் கொண்டு ஜீவிக்குஞ் சிலந்தி.
14. ஷை
15. ஜீவனும்,
16. சஞ்சரிப்பான்.
17. ஜீவனை யதிட்டாதாவாகப் பெற்ற
18. சுழுத்தியில்.
19. பரந்து.
19. ஷை
20. தனது கூடு,
21. சுழுத்தி.
22. ஸமாதானம் சொல்லுகிறான்.
23. யாகாதிகளும் தானாதிகளும்.
24. விருப்பங்களில்லாத.
25. குழந்தை-
26. சுழுத்தி-

27- சொரூபாநந்தம்-

28. நாடீமார்க்கத்திலேயே

29. ஓர்வகைப் பச்சைப்புழு-

30. ஷை

31. எட்டுச் சிறுமட்டுண்டுகளே.

32- அந்த ஆன்மாவையே-

33- ஆட்டின் கழுத்து முலைபோல்-

34 அறிவையும் தேவதையையும் பெற ஏதுவாம்-

35- ஸமாதி கூடியவனுக்கு-

36- சேருவதில்லை என்று கூட்டுக-

37- ஆகாச சரிகர்-

38- சலசரங்கள்-

39- நீரில் பிறப்பன-

40- மக்கள் தேவராதியோர்-

41- பஞ்ச பூதங்கள்-

42- ஹிம்ஸை செய்யும் விலங்குகள்-

43- உண்மை வஸ்துவும் ஸகுணமும்-

44- சைதன்யம்-

45- மும் மூர்த்திகள்-

46- அஹிம்ஸ த்யானிப்பான்-

47- பிரம்ம சொரூபமான.

48- ஜீவன்முக்த சொரூபத்தை-

சுபம்.

ப்ரம்மோபநிடதம்,

மூலமும் தமிழுரையும்,

அவதரணிகை.

இனி, சகல வேதாந்தங்களின் பரமரகசியமாய், அநுபவத்தால்மட்டும் அறியக்கூடியதாய், அநேககோடிஜன்மங்களிற் செய்த புண்ணிய பரிபாகத்தின்முதிர்ச்சியால் சதாசாரியன் கடாட்சம்படைத்தகாலத்தில் அந்தக்கணமே அபரோக்ஷமாயறியக் கூடிய ஜீவபிரமவைக்ய பிரமானந்த போகத்தை அநாதியவித்தையினால் தடைபட்டுள்ள தம் சொருபாநந்தத்தைத் தாமறியாது சம்சாரத்திற்பட்டுழலும் ஜீவர்களை யநுபவிக்கும்படி அவ்வியாஜகருணை பரிபூரித சகுணையாகிய அன்னையைப்போல் யஜுர்வேதத்தின் ஓர் பகுதியாகிய பிரமசாகை தனது முற்பகுதியில் சம்சாரிகள் சித்தசுத்தியடையவேண்டிய நற்கருமங்களையுபதேசித்து, அவற்றால் சித்தந்தூய்மைபெறச் சாதனசதுஷ்டயங்கைகூடிய சமயத்தில் உத்தமமாகிய ஆன்மதத்துவத்தை யுபதேசிக்கின்றது.

« [illegible] என்றதனால்,

இதன்பொருள் "இனி இப்புருடனுக்கு நான்கு ஸ்தானங்கள் உள்ளனவாம்" என்றது.

விசேஷவுரை—"இனி என்றது நூலின் துவக்கதில் மங்களார்த்தமாயுள்ளது. அல்லது முற்கன்மகாண்ட முற்றுப்பெற்றமையின் அதன்பின் ஞானகாண்டம் ஆரம்பிக்கப்படுவதால் அதற்குக்குறியாய் அமைந்தது மாகலாம். இப்புருடனுக்கு "பிரத்யக்ஷமாய்த் தான் எனத்தன்மைத்தானமாய் அனுபவிக்கப்படும் ஆன்மாவுக்கு அல்லது கீழ்பிரகரணத்தில்

அனேககன்மங்களைச் செய்யவதிகாரியாயும் அனேககன்மாராதயனுயும் குறிக்கப்பட்ட அவித்தை வித்தைஎன்னப்படும் இரு உபாதியுள்ளானுக்கு, அதாவது ஜீவேசுவரபேதமெய்திய விசுவ தைஜஸ பிராஞ்ஞசாக்ஷிகளாயும் பிர்ம்ம விஷ்ணு ருத்திர அக்ஷர ஸ்வரூபனுயுமுள்ளவனுக்கு நான்குஸ்தானங்களும், நான்கு அவஸ்தைகளும், நான்குதொழில்களுமாம், அதாவது ஜாக்கிரம் சொற்பனம் சுழுத்தி துரியம் எனப்படுமவஸ்தைகள் - சிருஷ்டி ஸ்திதி ஸங்காரம் திரோதானம் என்பனதொழில்களாம்- இந்தஸ்தானங்கள் உபாஸகனுக்குப் பிண்டத்திலும் உபாஸ்யனுக்கண்டத்திலும் ஆகவே அம்முறை பின்விரிக்கப்படும்.

பிருகதாரண்யமாதியுப நிடதங்கள் எலாம் ஆத்தும தரிசனத்தின் பொருட்டே கேட்டலாதிகள் விதித்தபடியால் அந்நிருபாதிக சுத்தாத்துமஸொரூபஞான கைவல்யத்தின் பொருட்டு வேதம் ஆன்ம சொரூபத்தை இங்குமுதல் குறிப்பதாயிற்று

அவதரணிகை.

அந்தஸ்தானங்கள் இவை என விரிக்கின்றார்.

“ நாபிர்ஹ்ருதயம் கண்டம் மூர்தா இதி ,, என்று

(இ—ள்) நாபி-இதயம்- கண்டம்- உச்சியுமாம், எ—று.

(விரை) ஈண்டுநாபி என்றது கொப்புளேயாயினும் அது பித்தகோசமேயென்க- இதயம்- என்பது ஐந்து துணைக்கருவிகளுடன் அதோமுகமானசெந்தாமரை வடிவமான மாம்சமாயினும் அதனுட் புறத்துள்ள தெம்பரமேயாம். கண்டம் என்பது கழுத்தெனப்பொருள்படினும் கழுத்தின்மேற்புறத்துள்ளலம்பிகாஸ்தானமேயாம். உச்சியென்றது தலையேயாயினும் அதனுட்புறத்துள்ளஸஹஸ்ராரமும் அல்லது பிரம்மரந்திரமுமாம்;ஆகையால் இங்குகுறித்த நான்கு பெயர்களும் ஆகுபெயர்களாம்.

மேற்காட்டிய இடங்களில் எவ்வெவ்வவஸ்தைகளில் எவ்விதமாய்ப்

பிரத்யகாத்துமாவை உபாஸிக்கவேண்டும் என்பதை அடுத்தமந்திரத்தில் குறிக்கின்றார்.

தத்ர சதுஷ்பாதம் ப்ரஹ்ம விபாதி
ஜாக்ரிதே ப்ரஹ்மா ஸ்வப்னே விஷ்ணு:
ஸுஷுப்தௌ ருத்ரஸ் துரீயமக்ஷரம்
ஸ ஆதித்யோ விஷ்ணுச்சேச்வரச்ச என்று

(இ—ள்) அங்குநான்கு பாதமுள்ள பிர்ம்மம் விளங்குகின்றது ஜாக்கிரத்தில் ப்ரம்மா - சொற்பனத்தில் விஷ்ணு, சுழுத்தியில் ருத்திரன், துரீயமானது அக்ஷரம் ஆதித்யன் விஷ்ணு ஈசுவரனுமாம். எ—து

(வி—ரை) அங்கு என்றது அண்டத்திலும் பிண்டத்திலுமென்பது. நான்குபாதம் உள்ளது நான்குதிருமேனிகள் அண்டத்திலுமுள நான்குஅவஸ்தைக்கேற்ப நான்கு நாமதேயங்களுடன் பிண்டத்திலுமென்று குறிப்பது-அந்த ஜீவநாம தேயங்கள் விசுவன் தைஜஸன் பிராஞ்ஞன் துரியன் எனமாண்டூக்ய மாதியுபநிடதங்கள் கூறுகின்றன- ஈண்டுஅவஸ்தைகடோறும் மூர்த்திகள் சொல்லப்படினும் ஜீவாவஸ்தைகளும் சொல்லப்பட்டதாகவே கொள்ளவேண்டும். அங்ஙனமில்லாது அவஸ்தைகளுடன்மும்மூர்த்திகளைச்சம்பந்தப்படுத்தக்கூடாது. மேலும் வியஷ்டிகளைமூவவஸ்தைகளிலும் முறையே அமைத்துத் துரீயனை ஸர்வஸ்வரூபனாய்க்குறித்தலும் பொருந்தும். அக்ஷரம் என்று சொல்லபடும் கூடஸ்தன் ஆதித்யன் விஷ்ணு ஈசுவரன் மூன்றுருபமுமாம். இவற்றுள் அமையும் பிராயபாடத்தையும் பிரகரணத்தையும் நோக்கி ஆதித்யன் என்பது ஹிரண்யகர்பனைக் குறிக்குஞ்சொல்லாகக்கொள்ள வேண்டும். இச்சொரூபத்தையேமல்விடம் சுத்தப்ர்ம்ம சொரூபமாகச் சொல்லும் வசனங்களுளவாயினும் துரீயாதீதமே அஃதெனத்துணியப் பலவுபநிடதங்கள் பிரமாணமாம். அவைஅவ்வவ்வுபநிடதவுரைகளில் விளங்கும். இங்குதுரீயாவஸ்தையில் தன்மயமாய் நிற்கும் ஆன்மா ஸர்வருபனென்று விதித்ததையே மீண்டும்

நிர்மனவிளக்கத்துக்காக விரித்துத் துரீயாவஸ்தா கைவல்யத்தைக் காட்டுகின்றார்.

ஸ்வயமமநஸ்கமச்ரோத்ரமபாணிபாதம்
ஜ்யோதிர்விவர்ஜிதம் யத்ர லோகா ந லோகா தேவா
ந தேவா வேதா ந வேதா யஜ்ஞா ந யஜ்ஞா மாதா
ந மாதா பிதா ந பிதா ஸ்நுஷா ந ஸ்நுஷா
சண்டாளோ ந சண்டாள: பௌல்கஸோ
ந பௌல்கஸ: ச்ரமணோ ந ச்ரமணஸ்தாபஸோ
ந தாபஸ: ஏகமேவ பரம் ப்ரஹ்ம விபாதி
நிர்வாணம் — என்று

(இ—ள்) எஃது இயல்பில் மநமற்றது, காதற்றது, காலற்றது, கையற்றது சோதி வடிவமாயது அறியப்படுவது; எதனிடம் உலகங்கள் உலகங்களாகா; தேவர்கள் தேவராகமாட்டார்; வேதங்கள் வேதங்களாகா; யஞ்ஞங்கள் யஞ்ஞங்களாகா; தாயுந் தாயாகாள் தகப்பன் தகப்பனாகான்; நாட்டுப்பெண் நாட்டுப்பெண்ணாகாள்; சண்டாளன் சண்டாளனாகான்; சக்கிலியன் சக்கிலியனாகான்; சிரமண் சிரமண்ணனாகான்; தவஸி தவஸியாகான்; ஏகமாயுள்ளது -அதுவே பரம்பிரமம் விளங்குவது நிர்வாணமாம். ஏ—து

(வி—ரை) இயல்பில்- சோதனை செய்தால், விசாரம் செய்தால்- மனமற்றது- மனம்முதலிய கரணங்கொண்டு ஒரு பொருளையுணர்வதன்றி மனமாதிகருவிகளுக்கும் சொரூபம்கொடுப்பது. எதையேமனதால் அறியக்கூடாது; எது மனதிற்குச் சக்தியைக்கொடுக்கும்; என்றசுருதிவாக்யத்தால் மனமாதிகருவிகள் அதன் சன்னதிவலிகொண்டு சேதனப்பொருள்களாய்ப்பிரகாசிக்கின்றனவேயன்றி இயல்பில் மனமாதியகக்கரணங்களும் காது முதலியபுறக்கருவிகளும் கால் கைமுதலிய கன்மேந்திரியங்களும் ஒருபத்தாண்மாவுக்கு சுகதுக்கானுபவக் கருவிகளாகத் தோற்றுவ

துபோல் ஆன்மசொரூபவிசாரஞ்செய்துழி நிகழாதாமென்பது குறிக் கப்பட்டது. சோதியென்றது எத்தன்மையும் தம்முன் றேற்றப்பெ றுதபிரம்மத்திடம் உண்மையிலில்லையாயினும் இதரவஸ்துக்களை தன்ஸ ம்பந்தத்தால் பிரகாசிக்கச் செய்வதும் தான்ஸ்வயம்பிரகாசமாய் நிற்ப தும் அதனியல்பாகவே அத்தன்மை நோக்கிய நமக்ககப்பட்ட விசே டணக்குறியீ தாமென்க. அறியப்பட்டது என்றதுப்ரம்மம்எவ்வறிவுக்கு ம் விஷயமாகாது. எந்த வறிவுக்காவது விஷயப்படக்கூடிய எவ்வித குணமும் அதனிடம் இல்லையாகவே தவறேயெனின், அற்றன்று ஒரே பொருளின்கண் தன்னைத்தான் அறிந்தான் என்பதாதி யிடங்களிற் போல் அறிவதும் அறியப்படுவதும் அதுவேதானாகவே ஒவ்வும் என்க மேல் அதன்சொரூபமேஸத்யமானால்இவ்வுலகப்பொருளனைத்தும்எங்குள்ள னவெனவாசங்கைநிகழ அதனை மறுத்தோதுகின்றார் எங்கு என்பதாதியால் எதனிடம் சென்றால் எனவருவித்து கூட்டுக. எதனிடம் எப்பரம்பொரு ளிடம் சென்றால் அஃதேதான் எனவறிந்து நிட்டை கூடித்தன்மய மானால்- உலகங்கள் உலகங்களகா; உலகங்கள் என்றது பிரபஞ்சத்தை இஃது “லோக,, என்றவடசொற்றிரிபு. அச்சொல்லுக்கு ‘க்காணப்படுவ து ‘என்பது பொருள்- அப்படியாக ஐம்புலன்களுக்கும் மனதுக்கும் பு லப்படும் பொருளனைத்தும் அப்பதப்பொருளாம் ! அதையேவடமொ ழியில் திருச்யம் என்பது. உலகம் என்றசொல் காரணவிடுகுறியாய்க் காண்பொருள்கள் அனைத்துக்கும் பெயராயது . அவ்விதமான திருச்யப் பொருள்களானவை உலகங்களாகா. திருச்யங்களாகாவாம். ப்ரம்மதரி சனம்கிடைத்தால் அவருக்கு உலகம்தோன்றாது “என்பதுகருத்து

யத்ரத்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத் தத்கேநகம் பச்யேத்
தத்கேநகம் ச்ருணுயாத் [illegible] , எங்கெவனுக்கெல

லாமான்மாவாயது அங்கெதனாலெதையவனே,காண்பன்; அங்கெதனாலெ தையவனே கேட்பான் என்ற அனேக வேதாந்தவசனார்த்தங் கள் இதிலடங்கியனவாம். மேலும் - உலகத்தில் முன்னர் அஸ்தி பாதி பிரியம் ரூபம், நாமம், “என்ற ஐந்து தோன்றியன. அவைகளில் ஆத்துமசொரூப விசாரணையால் முதல்மூன்றும்எஞ்சியது; இரண்டொழி ந்தது; அப்படியானால் சச்சிதானந்தமே மிகுதி. அப்படியிருக்க அவ்வி

தபரிபாகிக்குலகம் எது? அவனுக்குக்காணப்படாமையன்றோ அது; ஆகவே,
எதனிடம் உலகங்கள் உலகங்களாகா? "என்றது பொருந்தியது. மே
லும்உலகங்கள்-நாம ரூபங்கள், அங்ஙனம் நாம ரூப வடிவம்பெற்றனவா
ய் ஆகா; தோன்றமாட்டா. மற்று!! சச்சிதாநந்தமாகவேதோன்றும்."என
வும்பொருளுரைக்கலாம் .நிற்க,உலகம் மட்டே அங்ஙனமோ?உலகங்களை
உண்டாக்கிக் காத்து அழிக்கும்மும்மூர்த்திகளான தேவர்களும் அப்படி
தானே? எனச்சங்கிக்க "அவர்களையும் அப்படியே என்றுகாட்டிவருகின்றார்-
தேவர்கள் தேவர்களாகமாட்டார் என்று, அவர்களே பூர்வமந்திரத்
திற் குறிக்கப்பட்டமையால்! தேவர்கள் மும்மூர்த்திகள். வேதங்க
ள்வேதங்களாகா வென்றது ஞானக்கருவிகளாகவே அச்சமயம் எவ்வித
வெளியறிவு மின்மையால் வேதங்கள் வேதங்களாகாவென்றகருத்தால்
யஜ்ஞங்கள்- என்றது கன்மங்களைக் குறித்தது, அவையெலாம்தானே
ஒழியுமாதலால் அவை அவ்விடத்துபயோகப்படா வென்பதுகருத்து.தா
ய்தகப்பனுறி சம்பந்தம் சரீரத்தின் வழியாதலால் அச்சரீரத்தில் சத்ய
த்துவப்புத்தி யுள்ளவரையே; அவைதுரீய நிலையில் இல்லை என்றதுக
ருத்து. தவசித்வசியாகான் என்றதுவரை இதேவிஷயத்தின் விரிவாம்.
அதுவேபரப்பிரமம்என்றது,அஃதுரீயாயுள்ளாய்என்றதத்துவமஸிமகாவாக்
யார்த்தத்தையனுசரித்தது.மேற்கண்டபிரபஞ்சவியாபார மற்றவிடமேபி
ர்ம்மஸொரூபம்விளங்குமாம்; ஆதலாற்றான் அனேக வேதாந்தங்கள் பிர்ம்
மவித்து பிர்ம்மமேயாவான்என்று நிரூபித்தன. அந்தப்பிர்ம்மம் கர்த்திருத்
துவம், போக்திருத்துவம் முதலியஎவ்விததர்மமும் அற்றதேயெனக்காட்
டுதற்குநிர்வாணம்- என்று அதனுக்கு விசேஷணமிட்டது. மேல்விசே
டணத்தால் அது சுத்த நிர்விகற்பசுக ரூபம் என்பது சொல்லப்பட்
டது.விளங்குகின்றது என்பதனால் பாதம் "என்கிறபிரகாசம் அதன்ம
யமே எங்கும் என்றும், நிர்வாணம் என்றதனால் அதுபிரிய ரூபம அல்லது
சுத்தசுகரூபமென்றும்,பிர்ம்மம்என்றதனால் சைதன்யம்அஃதேயெனவும் பெ
றப்படுதலால், "பிரம்மம்விளங்குகிறது நிர்வாணம் என்றதுமாயிற்று. சச்சி
தாநந்தம் பிர்ம்மம் என்று சொல்லாது குறித்தது இவ்வாக்கியம்; ஆகவே
முன்னர் மூவவஸ்தைகளில் பிர்ம்ம விஷ்ணு ருத்திரர்களைக்குறித்துப் பி
ன்னர்மேற்கண்டபடிபிர்ம்மலக்ஷணம் கூறியமையால்- மூன்காண்டத்தி
ல் [illegible]மென நிரூபிக்கவேண்டியதாகவே அம்மாயாசபள சொரூபம்
மூவவஸ்தைகளிலும் உள்ள ஜீவாதிதேவதையானதே எனமுன்னர் நிரூ

...த்துத் தடஸ்தலக்ஷணத்தைச்சொல்லியபோதிலும் இங்குஸொரூ பலக்ஷணங்குறிக்கப்பட்டது. இதனால் நிஷ்பிரபஞ்சமான பிரம்மசொ ரூபம் சுருதியுக்திகுருபதேசங்களன்றி அனுபவிக்கப்படாதென்று நிரூ பிக்கவேண்டுவாராய் முன் மந்திரத்தில் அங்குதாபஸன் தாபஸஸ் ஸன் என்றதை இங்குவிரிக்கின்றார்—

நதத்ர தேவா ரிஷய: பிதர: ஈசதே என்று

(இ—ள்) அங்கு தேவர்கள் ரிஷிகள் பிதிருக்கள் ஸமர்த் தராகார். எ—து

(வி—ரை) அங்கு, முற்குறித்தவிலக்கணம்பெற்றப்ரம்மத்திடம் தே வர்கள், தேவரிஷி, பிதுருக்கள் பிரபஞ்சத்தில் பெரியோரேயன்றி நிஷ்ப் ரபஞ்சாத்துவிதவஸ்துவினிடம் அவர்கள்முனைக்கார். மேலும் மேற்கு றிக்கப்பட்ட நிர்விசேஷப்ரம் மாபரோக்ஷம்பிறக்கும்பொழுது இத்தேவ ரிஷிகளாதியோர் எவ்விதத்துமுணரப்படமாட்டார் அதுவிஷயமே முன் வாக்கியத்தில் விஸ்தாரமாய்எங்குஉலகங்கள் உலகங்களாகா என்பதா தியால்நிரூபிக்கப்பட்டது- இம்மந்திரச்சாயையுள்ள மந்திரங்கள் பிரகதா ரண்யத்தில் சுழுத்தியினியல் கூறுமிடம் படிக்கப்பட்டன. அற்றேல் இங்குதுரீயமென்றுகூறப்பட்டுள்ளஅக்ஷரப்ரம்மத்தின் சொரூபம்இம்மந் திரத்தால் சொல்லப்பட, பிருகதாரண்யம் அதைபிராஞ்ஞசொரூபம் என்றால் அவ்விரண்டும் முரணுதோ எனின் அற்றன்று; சுழுத்திதுரீய ங்களை ஒன்றுபடுத்தியும் வேருகவும் வழங்குவதுஉபநிடதங்களினியலே யாம். மேலும்சுழுத்திக்கும் துரீயத்துக்கும் உள்ளவேற்றுமைமற்றைய அவத்தைகளுக்குள்ளவேற்றுமைகளைப்போன்றனவல்ல;மற்றுஅதிசூக்கு மமாய்உள்ளது;அவ்வதிசூக்குமவேற்றுமையைப்பாராட்டாது பிருகதார ணியம்கூறியதெனலாம். ஆதலாற்றான் அச்சுழுத்தியில் மூலாஞ்ஞானரூ பமாய் பிரபஞ்சம்இருந்தே "யான்நன்குறங்கினேன்; ஏதுமறிந்திலேன் என்று அனுபவிக்கப்பட்டினும், அவ்வனுபவம்நாமரூபப்பாகுபாடற்றதா கவே அகாரியகாரியாம் என்றுபிரகாதாரணியத்தில் அதே பிரகரணம்நி ரூபிப்பதாயிற்று. யத்வைதந்நபச்யதி எங்குத்துவிதத்தைக் காண்பாளில்லைஎன்பதாதியால்நீண்டவுபந்யாஸத்தால் மேலும் பிருகதார

ண்யும் குறித்தஅக்ஷரப்ரமவித்தையே இதனிடத்திலும் சொல்லப்படுகிறது. அங்குகார்கிக்கு யாஞ்ஞவல்கியர் உபதேசித்தது இந்தபிர்ம்மவித்தையே; அதனையே ஒருவாறு சுருக்கியுபதேசிப்பதாய இவ்வுபநிடதம் அக்ஷராத்துமாபரொாக்ஷமேமுக்யமான முக்திமார்க்கமெனக்குறிக்கவெழுந்து அவ்வக்ஷரப்பிரமம் அவஸ்தைகள் கடந்ததுரீயாத்மஸொரூபமே அதுவே நிர்விசேஷம் • அதைவேறாகவறிந்தவர் இல்லை என்றுபசங்கரித்தது. இனி தேவராதியோரறியாமைக்குக் காரணம் கூறுகின்றார்

வ, திவ-ஃயூஸவ-(விெ&ெ)-கி, என்று

(இ—ள்) அறியத்தக்கவன்ஸர்வ வித்தைகளாலும் அடையப்படுவானே யாதலால் எ—து

(வி—ரை) எவன்இங்கு அவித்யாவித்யகங்கள் ஒழிந்துபரமாநந்தசாக்ஷாத்காரத்துக்காகவறியப்படுவான் அவனே தசோபநிஷத்துக்களில்குறித்தமுப்பத்திரண்டு வித்தைகளிலும் அடையப்படுவான் என்றதால் முன்னர் வேதாந்தங்கள் முழக்கிய அனேக வித்தைகளும் ஒருதத்துவத்தையடையவேயன்றிவேறில்லை எனவும் உபாய பேதத்தால் உபையபேதமில்லை எனவும் ஏற்பட்டது. இங்ஙனம் எல்லாவித்தைகளாலும்அறியத்தக்கவன் ஆத்மாவேயாதலால்அவன்சொரூபத்தையறியவேண்டியது தான்ஸர்வோபநிஷத்துக்களுக்கும் ஒக்கமுடிந்த கருத்து. ஆகஅவனை தேவர்கள். (மும்மூர்த்திகள் இந்திராதிகள்) என்று கொண்டு செய்யுங்கன்மங்களும், ரிஷிகள் (வஸிஷ்டாதிகள்) என்றுகொண்டு செய்யுங்கன்மங்களும், பிதிருக்கள்(அக்னிஷ்வாத்தாதிகள்) என்றுகொண்டுசெய்யுங்கன்மங்களும், அந்தபிர்ம்மசொரூபத்தையடைய நேரில் காரணமாகாது. ஆயினும் உபநிடதங்கள் கூறியபிர்ம்மவித்தைகளை யேற்றுய்யத்தக்க தோர்சித்தசுத்தியே அக்கன்மகோடிகளின் பயனாகையால்அத்தியாரோபவாத நியாயத்தால் முன்னர் பிரம்மோபாஸ்தி கன்மகாண்டத்தில் சொல்லப்பட்டதாகவே அதன்பயன் புனராவிருத்தியுள்ளதெனக் காட்டி அதன்மேற்பட்ட அபுநராவிருத்திலக்ஷணசுகப்பிராப்திக் காக அக்ஷரப்பிரம்ம வித்தையைக்கொண்டுபதேசிக்கும் சமயம் பூர்வவாஸனை வாராதொழியவேண்டியே முற்குறிக்கப்பட்டதேவராதியோர் இங்குபல்லாரல்லர் என்றுமறுத்து நிரூபித்து.ஸர்வவித்யோபசங்காரமுஞ்செ

ய்ப்பட்டது இதனாலென்க. ப்ருஹதாரண்யகம் ப்ரேனென்று உபநிஷத்தங்களில் பிருகதாரண்யம் மிகச் சிறந்ததாகையாலும் அது ஸ்ரீராமன் ஆஞ்சனேயர்க்குபதேசித்த முறையில் இதற்கடுத்ததாகையாலும், நூற்றொருசாகைகளுள்ள யஜுர் வேதத்தில் இவ்வுபநிடதங்கள் இரண்டும் ஒவ்வொருசாகை யுபநிடதங்களாகையாலும் ஒருபொருள் கொண்டு இரண்டும் முடிவது நியாயமேயாம். எ—து

(அ—கை) இனி அவ்விதம் உள்ள அக்ஷர ப்பிரம்மவித்தியையை எவ்வழியில் எவ்வதிகாரி கைப்பற்றியனுஷ்டித்துக் கதிபெறுவான் எனச் சங்கையுதிக்க அதனை மறுத்து வித்தையில் வேறுவித்தைகளை யுபசங்கரிக்கும் முறைகளைக்காட்டி ஸர்வ வித்யாமார்க்கங்களுக்கும் முக்யாதிகாரம் ஸன்யாஸத்துக்கே யெனவும் அதற்கும் அதன் பூர்வகாண்டத்துக்கும் உள்ளசம்பந்தத்தை காட்டுகிறார்.

ஹ்ருதிஸ்தா தேவதாஸ்ஸர்வா ஹ்ருதி ப்ராணா: ப்ரதிஷ்டிதா:
ஹ்ருதி ப்ராணாஸ்ச ஜ்யோதிஸ்ச த்ரிவ்ருத்ஸூத்ரஞ்ச தத்விது:
ஹ்ருதி சைதந்யே திஷ்டதி என்று

(இ—ள்) இதயத்தே தேவதைகள் எல்லோரும் உள்ளவர்; இதயத்தேதான் பிராணன்கள் இருக்கின்றன. இதயத்திலேயே பிராணன்களும் ஜோதியும் கலந்துள்ளன; அக்கலப்பையே முப்புரி நூல் என்றறிந்தார் இதயத்தில் அறிவிலேயே உள்ளது. எ—து

(வி—ரை.) இதயம் என்றது மற்ற விடங்களில் இருக்கும் இதயச் சொல்லைப்போல் செம்பொருண்மேனின்று ஐந்துதுணைகளுடன் கூடின சென்னிற மாம்ஸபிண்டத்தை மட்டிற் குறித்தொழிந்ததல்ல. மற்று வாக்ய சேஷத்தால் "இதயத்தில் தியானார்த்தமாகப் பாவிக்கப்படும் ஆன்மசைதன்யத்தையும்" ஆதார லக்ஷணையாற் குறித்த தாம். கட்டில் கரைகின்றது என்பதாதி பிரயோகங்களில் "கட்டில்" என்ற சொல் அக்கட்டிலிலிருக்கும் குழந்தையைக்குறித்தவாறுமென்க. அற்றேல் தாற்பரியம் ஒவ்வாமை என்ற ஏது பற்றியே ஆகுபெயராகக் கொண்டு மேற்குறித்த லக்ஷணம் பொருந்திய மாம்ஸத்துள் தியானத்

தமாகக்கற்பிக்கப்பட்ட ஆன்மசொரூபம் பொருளாகக் கொள்ளக்கூடு ம்பதாக, வேதமே "இதயம்" என்பதற்கு அறிவு "என்றபொருளை" வாக்யசேஷமாய்க்கூறியது பயினில் கூற்ருகாதோவெனின்? அற்றன்று அநேக் வுபநிடதங்களில் இதயம் எனப்படும் மாம்ஸ கண்டத்தை உபாஸனஸ்தானமாகக் குறிப்பது வழக்கமாதலாலும் "அது மாம்ஸகண்டம் கீழ் நோக்கியதாமரை முகிழ் போன்றது என்பதாதியிலக்கணங்கள் அதற்குச் சொல்லப்படுவதாலும் அதே விஷயம் இங்கும் எடுக்கப்பட்டதோவென்று கேட்போர் மயங்காவண்ணம் ஆகுபெயர்ப்பொருள் விரிக்கவெழுந்த வாக்ய சேஷம் பயனில் கூற்ருகாதென்க. மேலும் 'இதயம்' என்பதற்கு ஆன்ம சொரூபம் என்று வியாக்யானம் செய்கமை கொண்ட ஏகதேசமுகத்தான் இவ்வாக்யத்தில் அமைந்த சொல்லெல்லாம் பெரும்பான்மையில் ஆகுபெயர்களே யெனவும் குறிக்கப்பட்டது. அஃதெங்ஙனம் எனில் இதயம் பிராகிரதமாயின் அதில் 'பிராணங்களும் வாயு பஞ்சகரூபங்களாக விருக்கக் கூடும். இதயத்தின் விரிவும் குவிவுமே சுவாஸவாயுவின் போக்குவரவுகளுக் கேதுவாதலால் மேலும் அவ்விடத்திற்றனே எல்லாத் தேவர்களையும் தியானிக்க வேண்டுமாகவே அத்தேவதாச் சொல் எல்லாத்தேவர்களையும் சொல்லும் சோதி என்பதும் உலகத்துப் பிரஸித்தமான ஜாடராக்னியைக் குறித்து ஒழியும்; அங்ஙனமாயின், ஜாடராக்னிஸ்தானம் இதயமாகக் கொள்ள நேரிடுமெனல்கூடாது; சாமீபிகாதிகரணத்தில் இவ்விலக்கணையாதலால் 'கங்கையின் கண்ணிடைச் சேரி என்றது போற்பொருந்துமென்க. அது மாம்ஸகண்டமாயின் அதன்மேற்புறமாய் மார்பில் தரிக்கப்படும் பூணூலே முப்புரிநூல் எனவும் கொள்ள நேரிடும். ஈண்டு மந்திரங்கட்குப் பிராம்மணம் உரையிடும் முறைபற்றி உடனெழுந்த வாக்யசேஷம் "இதய" ச்சொல்லுக்கு அறிவென்று பொருள் கூறியமைந்தமையால் அதற்கேற்ப மற்றைய சொற்களும், அங்ஙனமாயினவென்றும். இவ்வாக்ய சேஷம் ஏகதேச முகத்தான் இவ்வாக்யத்தின் வியாக்கியானமேயாம். ஆகவே கிடைத்த பொருள் யாதெனில் கூறுதும். இதயத்தில் = சொரூப சைதன்யத்தில் எல்லாத் தேவதைகளும் எல்லாப் பிராணதேவதைகளும் ... ... அவரே குறிக்கப்பட்டனமயின்; அல்லது எல்லாத் தேவதைகள் என்றது மேற்குறிக்கப்பட்ட ஜாக்

திர சொற்பன சுழுத்தி துரீயாபிமானிகளான பிரம்ம விஷ்ணு ருத்திர ஸர்வேசுவரர்களைக்குறித்ததெனப்பொருள் கொள்ளலாம். இவர்களே பிரகிருதமான அக்ஷரப் பிரமோபாஸ்தியால் பிரஸ்தாபிக்கப் படுதலினென்க. உள்ளவர் ஆரோபிக்கப்பட்டவர் கயிற்றின் கண்ணரவுள்ளதென்றால் கயிற்றின் கண் அதன் சொரூபத்தை மறைத்துமாறாகக் கொள்வதுண்மைப் பொருளாதல போலாம். மேலே பிராணன் என்றதும் ஜீவசொரூபத்தை. அந்த சைதன்யத்திடமே ஜீவத்துவமும் ஜீவநாநாத்துவமும் கற்பிதமாதலால்; இனி இதயமாகிய சுத்த சைதன்யத்தில் ஜீவர்களும் பிரம்மகோடிகளாகிய மூர்த்திகளுமே கற்பிதர். அவைகளைக் கடந்த தடஸ்த லக்ஷண மாயாசபன சகுணம் கற்பிதமன்றேவென்ன வாசங்கை நிகழாவண்ணம் 'இதயத்தில் சோதியும் பிராணனும் கலந்து நின்றதென்கிறார், சோதி என்றது இங்கு சிதாபாஸனாகிய ஜீவனுக்கந்தர்யாமியாய் இதயத்தினிடையே தியானிக்கப்படும் பரமாத்தும சொரூபம் குறிக்கப்பட்டது. இப்பரமாத்தும சொரூபமே முற்கண்டத்தில் "அந்தர்யாமி" நியந்தா எனக் குறிக்கப்பட்டதாம் என்க. மேலும் இப்பரமான்ம சொரூபமே அக்ஷரப்பிரம்மம்.

க்ஷரம் ப்ரக்ருதிரித்யுக்தம் புருஷோக்ஷர உச்யதே
தாவுபௌ ப்ரேரயத்யேக: ஸ பரமேச்வர:
யஸ்மாத் க்ஷரமதீதோஹம் அக்ஷராதபி சோத்தம:
அதோஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம:

பிருகிருதி;க்ஷரம் எனப்படும் புருடன் அக்ஷரன் எனப்படுவான் இருவரையும் நியமிப்பவன் பரமேசுவரனாம், என்று புராணங்களும் ஏதனால் யான் க்ஷரத்தையும் அக்ஷரத்தையும் அடக்கிமேற்பட்டவன் ஆதலால் உலகத்திலும் வேதங்களிலும் புருடோத்தமன் எனப்பெயர் பெற்றேன் என்று கீதையிலும் உளதாம் என்க. அற்றேல் உதாகரித்த வசனங்களில் பரமாத்துமா க்ஷராக்ஷரங்களுக்கு மேலானவன் என்பது கிடைப்பதேயன்றி அவன் அக்ஷரன் என்பது கிடைக்கவில்லையே எனில் உண்மையே இவ்வசனங்கள் அவன் நியந்தாவென்பதற்குத்தான் மேற்கோளாகக் கொள்ளவேண்டும். மற்று இப்பொருளே யக்ஷரமென்

தை முன்னர் இவ்வுபநிடதம் ஆரம்பத்திற்குனே நிரூபித்ததும் முண்ட கம்;பிரகதாரண்யம் முதலிய வுபநிடதங்கள் விரித்ததுமே போதுமாம். இவ்விதம் சைதன்யத்திற் கற்பிக்கப்பட்ட ஜட ஜீவேசுவராதி தத்துவ தாத்துவிகங்கள் எல்லாம் ஒரே சைதன்யாச் சிரிதம் எனக் காட்டுதற் காகவே அதையே என்பதாதி எடுக்கிருர். அதையேமுற்கூறிய ஸர்வா திஷ்டான சைதன்யத்தையே முப்புரிநூல் அந்தணர் வெளிக்குறியாய்த் தரிக்கும் நூல் எனவறிந்தார் அந்தர் முகரான யோகிகள் எனவருவித்துக் கூட்டுக;முப்புரி நூல் இது யஞ்ஞோபவீதம் எனப்படும். அதன் பெருமை பின் விளங்கும். இதுண்மையில் இதயத்து ஜட ஜீவேசுவரா திஷ்டான சைதன்ய பிரதிநிதியே யன்றி ஸொரூப யஞ்ஞோபவீத மல்ல. யஞ்ஞோபவீதப் பதப்பொருள் பின்வரும். அதையே என்று ஒருமையாய்ச் சுட்டியது பொருள் ஒன்றே யாதலின் என்க. ஆகவே ஆன்ம சைதன்யமே உபாதிபேதம் பற்றி ஈசுவரனும் ஜீவஸ்வரூபமாய் பிரதிவ்யாதிபூதபவுதிகப் பிரபஞ்சமாயும் தோன்றுவதால். அவ்விதம் தோன்றுவன வெல்லாம் அவஸ்தாத்திரயத்துட் பட்டனவேயாம். அவ்வவஸ்தைகளைக் கடந்ததிவ்ய சொரூபம் சுத்த சைதன்யமே. அதையே ஸர்வாதிஷ்டான மாகத்தியானித்து, குணோபசங்கார முறையில் அதனிடமே எல்லா பிரபஞ்சங்களையும் ஒடுக்கி அச்சைதன்ய மயமாய் எஞ்சிப் பிரம்ம நிஷ்டை கூடுவதற்காக இளமையிற்றுனே பெரியோர் பூணூ றறிப்பித்து நற்றொழிலை நமக்குக குறித்தனரென்பது பொருளாம்.

அவதாரணிகை.

அங்ஙனமே பொருள் கொள்ள வேண்டுமென்பதற்கு யஞ்ஞோபவீததாரண மந்திரமே போதுமானதென ஏடுத்துக்காட்டுகின்ருர்.

𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂

𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑍇𑌰𑍍𑌯𑌤𑍍𑌸𑌹𑌜𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍

𑌆𑌯𑍁𑌷𑍍𑌯𑌮𑌗𑍍𑌰𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑍁𑌞𑍍𑌚 𑌶𑍁𑌭𑍍𑌰𑌂

𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌂 𑌬𑌲𑌮𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇𑌜𑌃 என்று

(இ—ள்.) யஞ்ஞோபவீதம் பரமம் பவித்திரமானது முன் பிரஜாபதிக்கு உடன் பிறந்து ஆயுளைக் கொடுப்பது; ஆதியிலுள்ளது (சிரேஷ்டம்) சுப்பிரமானது, தரிக்கப்படுவது இவ்யஞ்ஞோபவீதமே பலமும் தேஜஸ்ஸும் ஆகுக, எ—று.

(வி—ரை.) யஞ்ஞோபவீதம் யஞ்ஞாதிகாரத்துக்காகத் தரிக்கப்படும் உபவீதம் (உபவீதம் எனில் இடது தோள் முதல் வலது அரை சுழன்று வரும் நூல்). இவ்விஷயம் தைத்தரீய ஆரண்யகத்தில் நிரூபிக்கப்படும்; இவ்வுபநிடதமும் கருமாங்கமாகஉற்ற யஞ்ஞோபவீதம் ஒன்றுண்டென்றுமேல் நிரூபிக்கும்; ஆகவே யஞ்ஞம் இருவகைப் படவிதுவும் இருவகைப்படும்; யஞ்ஞமோ அந்தர்யாகம் பகிர்யாகம் எனப்படுவன. அந்தர்யாகத்தையே ஆத்துமயாகமென்பர் பெரியோர். பகிர்யாகமே கன்மயாகமெனப்படும். இவ்விரண்டிலும் அதிகாரமஞ்ஞோபவீதம் உள்ளவனுக்கேயாம். ஆகவே அந்நூலும் யஞ்ஞோபவீதம் என்றசொல் காரணவிடுகுறியாயிற்று. பரமம் சிறந்தது. பரமம் (மா) என்றமாவையடையக் கடக்கச் செய்வது; அல்லது பரமமான "மாவை" ஐசுவரியத்தைத் தருவது ஸாஹிஸ்ரீஶ்ரூதாஸதா || அது சத்துக்களுக்கக்ஷய நிதியாம் என்று வேதங்கள்சொன்னபடி மோக்ஷலக்ஷ்மியே ஸாதுக்களுக்குப்பரமைசுவரியமாம். அதைத் தருவது சிரேஷ்டமென்றது பிரும்ம வித்தியாதிகாரம் வரை உத்தமாதிகாரங்களைக்கொடுப்பதாதலால்; பவித்ரம் என்பது பரம புண்ணியத்தைக கொடுப்பதால் உபவீதத் தைத்தரிப்பதற்கு முன் எவ்வித விதிவிலக்கமென்று தெரிந்த குழந்தைக்கு வைதிக விதிவிலக்கறிந்து, கொள்ள வேண்டியதைக் கொண்டு தள்ள வேண்டியதைத் தள்ளிப் பூர்ணனுஷ்டானப்பயனாய புண்ணியத்தைப் பெறுவானாதலின் அதற்குக்குறியாய்உபவீதத்திற்கு அவ்விசேடணமமைக்கப்பட்டது. இது ஆத்துமயாஜிகளிடம் பயன்பெறுவதெப்படி யெனில் அவர் அனாத்துமாவான பிரபஞ்சத்தை ஒழித்திட்டும், ஆத்தும சைதன்யமாத்திரராய் நிட்டையில் பேரானந்தம்பெறுவாராதலின் பிராணஜ்ஜோதிச் சேர்க்கை என்ற அந்தர்யஞ்ஞோபவீதம்பரமம் பவித்திரமாம். இது ஆதியில் பிரம்மதேவனுக் குடன் பிறந்ததெனப்படுவது;எதனால் எனில் பிரம்மதேவனைப்படைத்துப் பரமேசுவரன் அவருக்குச் சர்வவேதவேதாந்

வுண்மைகளையும் உபதேசித்ததாக தைத்ரீயம், சுவேதாசுவதரமந்திர ஜாபாலங்கள் கூறுதலால் என்க. ஆயின் ஜோதிராத்தும விஞ்ஞானம் ஸ்பஷ்டமாய் ஆதியில் பிரம்மதேவனுக் காண்டானமையாற்றான் அவரே வஸிஷ்டாதி யாதிகாரிக பரமாசாரியார்களுக் கெல்லாம் குருவாய் முதலில் அவர்களைப் படைத்து அவர்களுக்குக் கன்மாங்கமான யஞ்ஞோபவீதத்தையும் ஞானங்கமான அந்த யஞ்ஞோபவீதத்தையுந் தரிப்பித்தாரவரேயாம் என்க. வேறு சாகைகளில் ப்ரஜாவதேஸ் என்ற சொல்லுக்குப் பதிலாக ப்ருஹஸ்பதேஸ் என்பது படிக்கப்பட்டாலும் ப்ருஹஸ்பதிர்ப்ரஹ்மா என்ற வாக்யசேஷத்தால் பிரகஸ்பதி சத்தத்துக்குப் பிரம்மதேவனும் பொருளாதலால் எதுங் குற்றமில்லையாம் என்க. மேலும் ஸஹஜம் என்றால் உடன்பிறந்தது என்றது தாற்பரியம்; பிரம்மதேவனன்றி மற்றவருக்கு அது மற்றவர் செய்யும் சம்ஸ்காரத்தில் அமையும் என்று சொல்லப்பட்டது. ஓர் சமயம் ஜன்மாந்திர சுகிர்த பரிபாகத்தால் ஒரு உத்தம ஜீவனுக்குண்மையில் ஜோதிராத்தும விஞ்ஞானமுண்டாயினும் அவருக்கு முக்ய ஸ்வரூப ஞானம் உண்டாவதற்காக ஓர் குருநாதனிடம் உபநயனம் வேண்டும் என்பது இதனாற் சொல்லப்பட்டது. ஆகையாற்றான் உபநிடதங்களில் ஒவ்வொரு சீடருக்கும் ஒவ்வொரு ஆசிரியர் உபநயநம் செய்வித்தார் என்று சொல்லப்படுகிறது. ஆகவேதான் ஆசிரியர் ஆபஸ்தம்ப முனிவர் 'ஸ ஹி வித்யாதஸ்தம் ஜநயதி, தச்ச்ரேஷ்டம் ஜந்ம' அவன் அவனை வித்தையாற் பிறப்பிக்கின்றான். அதுவே சிரேஷ்டமமான ஜன்மமாம் „என்றும் „தமோ வா ஏஷ தமஸ: ப்ரவிசதி யமவித்வாநுபநயதே இருளில் இருளே சேருதல்போல அறிவிலி செய்யுமுபநயனமது என்றும். தருமத்திற் சொன்னார். இச்சன்மம் சிரேஷ்டதமம் என்றதனால் சிரேஷ்டம் - சிரேஷ்டதரம். இருவகை முன்னுண்டென ஏற்படுகிறது. அதுவே ஜன்மத்திலமையும் வருணமும் உத்தம சுரோத்திரிய புத்திரனாய்ப் பிறக்கும் வருணச்சிறப்புமாம் இதனால் கருமாங்கமான வருணதரும யஞ்ஞோபவீதமும் குறிக்கப்பட்டது. அனாத்துமமானகர்மா ஆத்துமஸம்ஸ்காரமாகாமையால் ஆத்தும நிஷ்டாகாமருக்கு அந்த கன்மாங்கவுபநயனம் போதாது. ஆகவே ஓர் சற்குருநாதன் அவருக்கு

ரிய ஜோதிராத்தும விஞ்ஞானத்தில் அச்சுத்திரம் தரிப்பிப்பார். இவ்வுள்
வும் அவித்தியா வசர்களான ஜீவர்களுக்கேயன்றி அநாதிவித்தியோபாதி
சைதன்யமான ஈசுவர கோடிக்கல்லவென்று வேற்றுமை காட்டவே
உத்தேசித்து, பிரம்மதேவனுக்கது சகஜம் என்றதாம் - பிரம்ம தேவனென்
னுது பிரஜாபதி,, என்றதனுவ். பிரஜைகளுக்கு ஆக்குவோர் ஆளுவோர்
அழிப்பார் மூவரும் நாயகரேயாதலால் அம்மும்மூர்த்திகளுக்கும் அதுவே
உபலக்கணமாகக்கொள்ளவேண்டும். இதனாலேயே கிரமமுக்தியில் பிர
ம்மதேவனுடன் பிரமவிசாரம் செய்து முத்திபெறுவரென்றும் இப்ப
டியே லோகாந்தரங்களில்ஸாரூப்யாதிமுக்திபெற்றவர் முக்தியடைவார்
என்றும் குறிக்கப்பட்டதாம். பிரம்மனாதியோருக்கு வித்தியோபாதி
யால் ஆத்துமானுபவம் தடைபடாது பற்றி அவருக்கது உடன்பிறந்த
தென்றது. இது பிரம்ஞோபாஸ்தியின் அங்கமாகவே ஆயுளைக்கொ
டுப்பதாம். யோகாதி சாதனங்கள் இல்லாவிடின் ஆத்மயாஜிகளுக்கும்
மனம் நிலைபெறாதாகவே மனோலயார்த்தமாய் யோகாப்பியாஸத்துக்கு
வேண்டிய வரை ஆயுளும் வேண்டப்படும். முக்திக்குள்ள சாதனங்கள்
அமைந்திட்டால் அவையன்று வேண்டுவனவுமன்று. அவையெல்லாம்
அனாத்துமாக்களையாதலால் அனாத்துமாக்கள் எல்லாவற்றையும்ஒழிக்
கும் உண்மை ஞானத்தால் ஒழிந்தேதீரும் "ஆக' கன்மானுஷ்டானா
திகாரித்துவம் ஆத்துமயாஜிக்கும் ஆயுள் விரும்பத்தக்கதேயாம்; மே
லும் ஆதியில் இருப்பது எனப்பொருள் படும் 'அக்ர்ய, என்றதை யதற்கு
விசேடணமாக்கியதும்; இக்கருத்தாலேயே ஆதியில் சிருஷ்டிக்கு முன்
னதும் பிரம்மதேவனுடன்பிறந்தமையால் அது அதிகமான தூய்மைபெ
ற்றது என்பது பற்றிசுப்பரம் எனப்பட்டது. இதுவே பலம் தேயு எனப்பிரா
ர்த்திப்பது காமபரருக்குக் கன்மானுஷ்டானத்துக்கேற்றபடி பலமும்
யோகிகளுக்கு யோகாநுஷ்டான பலத்தையும் தேஜஸ் என்றது கர்மபர
ருக்கு பிரம்மதேஜஸாம், யோகிகளுக்கு ஆன்ம சொரூப மாத்திரையு
மாம். ஆயின் இவ்விருவித யஞ்ஞோபவீதங்களும் அவ்வவ்வாச்சிரமங்க
ளுக்கேற்றபடி கொள்ளவேண்டும். மேலும் இது பிரம்ம காண்டமாக
வே இந்தப்பிரகரணத்தில் சொல்லவேண்டிய ஜோதிராத்தும விஞ்ஞா
ன யஞ்ஞோபவீதமே பிரகிருதம். கருமகாண்டத்தை தழுவும்வழியில் கர்
மாங்க யஞ்ஞோபவீதத்துக்கும் பொதுவான மந்திரமே வினியோ

இக்கப்பட்டது. இத்தகைய யஞ்ஞோபவீதப் பெருமையள விடங்கா து இது எவ்வங்கங்கள் பெற்றதென்பதை விரிவாய் மற்றோரிடம் காணலாம்.

அவதரணிகை.

இத்தகைய ஞான யஞ்ஞோபவீதிகள் செய்துகொள்ளும் வெளிக்குறி ஏதேனும் உண்டோவெனக் கூறுகின்றார்

ஸஶிகம் வபநம் க்ருத்வா பஹிஸ்ஸூத்ரம் த்யஜேத் புத: ।
யதக்ஷரம் பரம்ப்ரஹ்ம தத்ஸூத்ரமிதி தாரயேத் ॥ என்று

(இ—ள்.) சிகையுடன் வபனம் செய்து கொண்டு வெளி நூலைவிட்டு விடவேண்டும். எது அக்ஷர பரபிர்ம்மமோ அதையே சூத்திரமெனத் தாிக்கவேண்டும். என்பது

(வி—ரை) சிகையுடன் வபனம் செய்துஎன்பதற்குச்சிலர் சிகையைவைத்து மற்றதை வபனம் செய்வதாய் பொருள் கொள்வாராய் மயங்கினர் அது தவறு. அங்ஙனமாயின் வேறு கன்மாங்க வபனம் போல இதுவுமாதவே வபனத்தைமட்டில் விதித்தலேபோதும். அவ்விதம் பொருள் கொண்டால் "சிகையுடன், என்றது மிகைபடக்கூறலாம் - ஸதோபவீதிநா பாவ்யம் ஸதாபத்தசிகேந ச என்று ஸ்மிருதிகளில் என்றும் எஞ்ஞோபவீதம் தரிக்கவேண்டும் எங்கும் சிகைகட்டியேஇருக்கவேண்டுமென்று நிரூபிக்கப படுதலால் சிகைகன்மாங்கம் என்றேற்பட்டது கர்மாங்க எஞ்ஞோபவீதம் எடுக்குங்கால் கன்மாங்கசிகையும்கன்மாதிகாரத்துடன் ஒழிபுமாம் என்க. சிகையை விதித்தவசனங்கள் எவையும் குடீசராதியோருக்கேயன்றி ஹம்ஸராதியோருக்கல்ல; வபனமேயில்லாது ஜடாதாரணம் மட்டி விருப்பினும் இருக்கலாம் என்பது வேறு. இவ்விஷயம் மேல் ஸந்நியாஸோப நிடதம் முதலிய வற்றில் விரியும். அனேக விடங்களில் யதிகளுக்குச் சிகையில்லை என்ற கருத்தால் ஞானசிகையுள்ளார் ஞான யஞ்ஞோபவீதிகள் அவர்கள் எனவுப நிடதங்கள் சந்யாஸி

கனைப் புகழ்வன வாயினவாம். ஆகவே சிகையை எடுத்துளஞ்ஞோபவீதத்தை விடவேண்டும் என்றே பொருள் கொள்ள வேண்டும். எஞ்ஞோபவீதம் மேலே பிரசம்சிக்கப்பட்டமையால் அது இங்கும் பொருளாகக்கொள்ள நேரிடின் ஜோதிராத்துமைக்ய ஞான யஞ்ஞோபவீத த்யாகம் நேரிடும் என்று கருதி வெளிநூலை என்றது அல்லது. எஞ்ஞோபவீதத்தை வெளியில் நீரில் விடுக வென்றும் பொருளிசைக்கலால் இங்ஙனம் சிகையும்யஞ்ஞோபவீதமும்இல்லாதார்கட்குச்சிகை யஞ்ஞோபவீதங்களை முக்கிய கன்மாங்கக் குறியாய்ப் பெற்றபிராம்மண்யத் துக்கு ஹானியுண்டோவெனின் இலை யிலை; இவர் தரிக்கவேண்டிய எஞ்ஞோபவீதமெனக் கூறுகின்றார்; 'எது' என்பதானால், சிலவுபநிடதம் அக்ஷரப்பிரம்மோபாஸனை கூறுவதாகையால் அந்தவக்ஷர ஜோதிராத்துமைக் யஞானமே இவருக்குச்சூத்திரமாம்என்றது. ஆகவே சந்யாஸிகளுக்குச்சிகையும் யஞ்ஞோபவீதமும்,வெளிப்படையாயில்லையென்றாயிற்று. இங்கு பிரணவவித்தையும் சொல்லப்படுவதால் பரப்பிரம்ம பிரதிபாதகமான அக்ஷரம் என்றுகூட்டிப் பிரணவம் எனவும் பொருள்கொள்ளலாம்; 'சூத்திகம்என்றதற்குப் பொருள் பின்னர் வெளியாகும். இது விதியாதலால் எவ்விதம் கன்மாதிகாரிக்கு எப்பொழுதும் பூணூல் வேண்டுமோ அங்ஙனம் ஞானிக்கும் மேற்கண்ட ஞானாதிகாரிக்கும் ஞானஎஞ்ஞோபவீதம்வேண்டும் என்பது அமைவதால் அவர் எப்பொழுதும் ஜோதிராத்துமைக்ய ஞானமன்றி யிருக்கக்கூடாது. எ—து

அவதரணிகை

இனி எச்சமயமும்,இடையறாது ஆத்தும கைவல்யத்யானம்செய்யவேண்டுமெனில் அதையெப்படிச் செய்வதெனில் அதன் சாதனத்தைக் காட்டிக்குறிக்கின்றார்

ஸூசநாத் ஸூத்ரமித்யாஹு: ஸூத்ரம் நாம பரம் பதம்।
தத் ஸூத்ரம் விதிதம் யேந ஸ விப்ரோ வேதபாரக:॥ என்று

(இ—ள்.) எது குறிப்பதோ அது சூத்திரமாம். சூத்ரமே பரமபதமாம். அச்சூத்திரம் அறிந்தவர் தணரே வேதங்கரைகண்டவராம். எ—து

(வி — ரை) எதுசெம்பொருளாக ஒவ்வொரு பிரபஞ்சப்பொருளையுங் கொள்ளாது அகண்டமாய பரம்பொருளைக்குறிக்கும் அதுவே சூத்திரமாம். அவ்விதம் பதமே .பரமபதம் பதமெனினும் சொல் எனினும் ஒக்கும். சொல்லுக்குப் பொருளுணர்த்தும் தன்மையியலாயினும் அச்சொல் எல்லாம் பொருந்தும் காரணமான பொருளைக் குறிப்பதுபற்றிப் பரமபதம் எனப்பட்டது, பரமம் என்றால் சிரேஷ்டமென்பதுகருத்து. இதையறிந்தவனே வேதமறிந்தவன் என்றது வேதங்கள் எல்லாம் இதனிகாரியமாதலால் என்றகருத்தால். லோகஸொரூபம்அறிந்தவன் எல்லாலோகவிகாரங்களையும் அறிவதுபோல பிரணவசொரூபமறிந்தவன் எல்லாவேதங்களையும் அறிவான் என்றதரம் இதேபொருள்.

ஸர்வே வேதா யத்பதமாமநந்தி தபாம்ஸி ஸர்வாணி ச யத் வதந்தி யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவீம்யோமித்யேதத் என்று பிரணவமேஸர்வவேதமூலமெனவும் அதுவெல்லாத்தவமெனவும் அதையே விரும்பிபிரம்ம சரியம் பெறுவார் பேரியோர் எனவும் உபநிடதங்கள் கூறினவாம். எ—து

அவதரணிகை,

பிரணவோபாசனை பிரகிருதமாகவே அதனை மீண்டும் விரிக்கின்றார்.

யஸ்மிந் ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ
தத்ஸூத்ரம் யோ விஜாநாதி யோகீ ஸ வேதவித் ப்ரியோ ||

என்று-

(இ — ள்.) எதனிடத்துநூலில் கோத்தமணிகள் போல் இவைகளெல்லாம் கலந்து நின்றன அச்சூத்திரத்தையே தத்துவத்தை யறிந்து யோகங்களை யனுட்டிக்கும் யோகி தரிக்கவேண்டும்-

என்றது

(வி — ரை) இங்கு முன்னீரடியால் சூத்திரமணி திருஷ்டாந்தத்
தால் அந்தர்யாமித்தன்மை கூறப்பட்டது. தனித்தமணிகள் தரித்த
ற்கு யோக்கியமாகாதுநிற்பதுபோல இவ்வுலகமும் அனேகமாய்ச்சை
தன்யசம்பந்தம் இல்லாவிடின் அகாரியகாரீ என்பதுபொருள். மே
லும் யெநவஸ்வ-ஹிதம் வெ்ராக்ஷம் ஸஒ ெத்ர உணிமணா என்பதற்கு நூலி
ன் மணிகளைப்போல இவையெலாம் எதனுல்சேர்க்கப்பட்டது என்ற
து பதப்பொருளாதலின் சூத்திரமணிகண நியாயத்தால் மணிகணஸ்
தானமா நுழைந்ததும் நுழைத்ததும் பிரமமேயெனக் குறிக்கப்படுத
லால் அஃதே உபயகாரணமாம் என்பதமைந்தது. தத்வத்தையறிந்து
யோகங்களை அனுஷ்டிக்கும், யோகியென அதிகாரி குறிக்கப்பட்ட
கேட்டலும் சிந்தித்தலுமமே அட்சர பிரம்மைக் கியசூத்திரத
ரண அதிகாரமென்றேற்பட்டது. ஈண்டு தத்வமெனப்பட்டது பர
பிரமத்தை. அதையறிந்த, என்பது ஆசான்முகம் கேட்டறிந்தெனப்
பொருள் கொடுக்கும். யோகத்தையனுட்டிப்பவனென்பது கேட்டப
டி சிந்திப்பவனெனப்பொருளுடையதாம். யோகமென்பது சித்தவிர்த்
தியை நிரோதித்தலென ஆசிரியர் பதஞ்சலியார் கூறுதலின் மனத்தைப்
புலவழிசெலுத்தி இடர்ப்படாதொடுக்கித் தத்துவத்தில் நிறுத்தி அதனி
டத்துஆசிரியன் உபதேசித்த இலக்கணங்களை இடையறுது சிந்தித்த
லே ஈண்டு யோகமெனக் குறிக்கப்பட்டதென்க. யோகியென்றது சன்னி
யாசிக்குக்குறிச்சொல்லாம். பொ்ரீ்வதி விபொ ஜ்ஞயஃ, யோகியென்
பவன் மூவகைப்படுவான் யென்பதாதி கூர்ம புராணுதி வசனங்களி
ல் அவ்விதமே யோகி யென்னும் சொல்லுக்குப் பொருள் காணப்படு
தலால் என்க. மற்று அச்சூத்திரதையே தரிக்கவேண்டு மென்றது
தெளிதலென்ற நிதித்தியாஸத்தைக் கூறியது. அஃதெங்ஙனமெனில்
மாலையென்ற சொற்பொருளாயமைந்த மணிசூத்திரங்களின் தொகு
தியைப்போன்றது இவ்வுலகமெனவைப்போம். இதில் நூல் உள்நு
ழையாவிடில் அம்மணிகள்மனிதர் ஏற்குமணியாகா. ஆயின் அம்மணிகள்
ஆன்ம சம்ஸ்காரமாய் பிரியமாவது (விருமபத்தக்கதாவது) உள்நுழை
ந்த நூலாலேதான் ஆகவே ஆன்மாக்களுக்கு மாலையாவது நூலேயன்
றி மணியல்ல. இவ்விடம் நூலெனக் குறிக்கப்பட்டது அக்ஷரப் பிரமமாத
லால்அதனையே தரிக்கவேண்டும். அதனிடத்தேற்றப்பட்ட மணிகளை

போன்ற உலகத்தை ஒழிக்க வேண்டுமென்றது பொருளாதலாலென்க. ஆயின் நிஷ்ப்ரபஞ்ச ப்ரம்மாபரோக்ஷாநுபவமே யோகிகளுக்குச் சூத்திரதாரணமாம்

அவதரணிகை.

மேற்கண்ட ஞானயக்ஞோப வீதிகளுக்கு ப்ரபஞ்ச ஸ்தானத்தில் பரிகரிக்கத்தக்க கர்மயஞ்ஞோப வீதத்தைக் குறிக்கும் முகத்தால் உத்தம யோகிக்கு ஞானயஞ்ஞோப வீததாரண பிரயோஜனத்தை முதல் மந்திரத்தில் குறித்து, சிலமந்திரங்களால் அதனைப் புகழ்கின்றார்

பஹிஸ்ஸூத்ரம் த்யஜேத்வித்வாந்யோகமுத்தமமாஸ்தித:|
ப்ரஹ்மபாவமிதம் ஸூத்ரம் தாரயேத்ய: ஸ சேதந:|| என்று

(இ—ள்.) உத்தம யோகத்தைப் பெற்ற ஒருவன் வெளி நூலைவிடவேண்டும். ப்ரம்மரூபமான சூத்திரத்தை எவன் தரிப்பான் அவனே சேதனனும். எ—து

(வி—ரை.) உத்தம யோகமென்றது நிட்டை கூடலைக்குறித்தது ப்ரம்ம சூத்திரத்தைத் தரித்தவனே சேதனனென்றது ப்ரம்ம சூத்திரப் போலியான கர்ம சூத்திரத்தை மட்டும் தரித்தவன் சேதனப் போலியேயாமெனப்புலப்படுத்தற்கே. சேதனப்போலியென்பதும் சிதாபாஸனென்பதும் ஒக்கும். சூஹாவஸவ்யவத் என்ற வியாச சூத்திரதின் பொருள் ஈதாமென்க. இதனால் கர்ம வாசனையுள்ள வரை பிரமசூத்திர சித்திபோலியேயாமென்று துணியப்பட்டது. அச்சூத்திரசித்தி யன்றி பிரம நிட்டை கூடாது. அந்நிட்டையின்றி சின்மாத்திர கைவல்யம் சம்பவிக்காதென்பது கருத்து.

கர்ம சூத்திரஞானசூத்திரங்களின் வைலக்ஷண்ணியத்தைக் குறிக்கின்றார்.

தாரணாத்தஸ்ய ஸூத்ரஸ்ய நோச்சிஷ்டோ நாசுசிர்பவேத் ||
||என்று||

(இ — ள்.) அச்சூத்திரத்தை தரிப்பதனால் உச்சிஷ்டனு கான் அசுசியாகான். எ—து.

(வி — யை) கர்மாங்க யஞ்ஞோபவீதங்களுக்கு ஸ்மசானாதிதே சபேதத்தாலும் ஆசௌசாதி காலபேதத்தாலும் சண்டாளாதி வஸ்து பாதியாலும் அசுசித்வம் உண்டு. சுத்தி குறையும் அப்படியே ஜீரண தோஷம் (சிதைவு) த்ருடிதம் (பிரிவு) கச்மலம் (அழுக்கடைதல்) முதலிய குற்றங்களும் உச்சிட்ட தோஷங்களும் (எச்சில்) உண்டு. மேற்கு றித்த சோதிரைக்ய ஞானயஞ்ஞோபவீதத்திற்கு உச்சிட்ட தோஷமும் அசுசிதோஷமும் இல்லையெனக் குறிக்கப்பட்டது. மேலும் ஒருவர் தரித்து விடுத்த யஞ்ஞோபவீதத்தை மற்றவர் தரிக்கக் கூடாதென்பதாதி பல நியமங்கள் கர்மாங்கயஞ்ஞோபவீதத்திற்குண்டு. அவைகளெல்லாம் இதற்கில்லையாதலால் இது நித்திய சுத்த புத்த சொரூபமென்றேற் பட்டது. என்பது

அவ்யஞ்ஞோபவீதத்தைத் துதிக்கின்றார்.

ஸூத்ரமந்தர்கதம் யேஷாம் ஜ்ஞாநயஜ்ஞோபவீதிநாம் ।
தேவை ஸூத்ரவிதோ லோகே தேயஜ்ஞோபவீதிந: ॥

(இ — ள்.) எந்த ஞான யஞ்ஞோபவீதிகளுக்கு சூத்திரமானது உள்ளடங்கியிருக்கின்றதோ அவர்களே உலகத்தில் சூத்திரமறிந்தவர்கள் அவரே யஞ்ஞோபவீதிகள் என்பது

(வி — ரை) ஞான யஞ்ஞோபவீதமென்றுசொல்லுவது அட்சரபரப்ரம்மைக்கிய ஞானத்தை; அவரே சூத்திர வித்துக்கள் சூட்சும வேதிகள் அவரே யஞ்ஞோபவீதிகள். என்றால் யஞ்ஞோபவீதப் பலனையடைந்தவர்கள்.

இதுவுமது-

ஜ்ஞாநஶிகா ஜ்ஞாநநிஷ்டா ஜ்ஞாநயஜ்ஞோபவீதிந: ।
ஜ்ஞாநமேவ பரம் தேஷாம் பவித்ரம் ஜ்ஞாநமுச்யதே

(இ — ள்.) ஞான நிட்டர்கள் ஞானத்தையே யஞ்ஞோபவீதமென்று ஏற்றவர் அவருக்கு ஞானமேபரமம் அதுவே பவித்திரம் என்பது.

(வி—ரை) ஞான நிட்டர் பிரம்மநிட்டர் சரமாசிரமிகள் ஞானமே பரமம் பவித்திரம் என்றது யஞ்ஞோபவீத தாரணமந்திரத்தில் பரம பவித்ரசப்த மிருத்தலால் இங்கு அதனைச் சேர்ப்பதற்கென்க.

சிகையை விரித்துரைக்கின்றார்.

அமெ்ரிவஸிவா நா நஹாயஸ௱ஜ்ஞா நஶயீஸிவா
ஸஸிவீ தஹுவஹ்ெகவிஉாநு ெநதமொகெஸயாரிணஃ

(இ — ள்.) அக்கினிக்கு சரீரத்தினும் சிகை வேறில்லாது போல் எவனுக்கு ஞானமயமாகவே சிகைஇருக்கின்றதோ அவனே சிகியெனப் படுவானேயன்றிகேசதாரியான மற்றவனங்ஙனமாகான். என்றது

(வி -- ரை.) சரீரத்திற் சிகையென்பது சேர்ந்த பொருளேயன்றிச்சமவாயிப் பொருளல்ல (பிரிக்க கூடாத உடன் பிறந்த பொருளல்ல) எலும்பு புலால் தசை முதலிய வற்றின் கூட்டுறவாலாகிய சரீரத்தின் கண் சேர்க்கை பிரிவுகளால்சுகதுக்கங்களை (நிறைவுகுறைவுகளை)த் தராதசிகையே பாஹ்யசிகையாம். ஞானசிகை ஞானரூபமேயாதலால் அதற்கக்னிசிகை உபமானம் கூறப்பட்டது. ஞான சிகையுடையவனை வித்வானெனன்றமையால் அஃதிலாதார் அங்ஙனமிலாதார் (அறிவிலார்களென்றேற் பட்டது. கர்மாங்க யஞ்ஞோபவீதங்களுக்கு ஆத்மானாத்ம விவேகமிருந்தே அனாத்மாவாகிய ஐக்கியத்தை ஒழித்து பரலோகத்தில் சத்திய சரீரம் பெறவேண்டி யாகாதிகளை யனுஷ்டிப்பாராயினும் அவருக்கு ஞான வைராக்யக் குறைவால் மீக்ஷியுண்டு. இவற் கஃதின்மையின் இது பெரிதாமென்பது கருத்து.

அவதாரணிகை.

ஆயின் முற்றிகூய கர்மயஞ்ஞோபவீதம் பயனற்றதோ வென்னின் அதிகாரவேற்றுமைபற்றி அது பயனுளதேயாமெகின்றார்.

கர்மண்யதிக்ருதா யேऽஸ்மின் வைதிகே ப்ராஹ்மணாதய꞉ ।
தைரிதம் தார்யம் ஸூத்ரம் க்ரியாங்கம் தத்தி வை ஸ்ம்ருதம் ॥

(இ—ள்.) வைதீககர்மத்திலெந்தப்பிராமணுதிகளுக்கு அதிகாரம் கூறப்பட்டுளதோ அவரே இந்தயஞ்ஞோபவீதத்தைத்தரிக்க வேண்டும் அதுகிரியாங்கமெனச்சொல்லப்பட்டது என்பது

(வி—ரை) வைதிககர்மத்திலென்றதால் வைதிகரல்லாத தாந்திரீகற்கு இவ்விதயஞ்ஞோபவீதமில்லையெனப்பட்டது. பிராமணுதிகளென்றது முதல் மூவருணத்தவரைக்குறித்தது; அதுகிரியாங்கமென்றதனுல் அதைத்தரிக்குஞ்சம்ஸ்காரம் பெருதார்க்கு அக்கிரியையில் அதிகாரமில்லை ஆதலாற்ருன் தைத்திரீயத்தில் தஸ்மாத்யஜ்ஞோபவீத்யேவாதீயீத யாஜயேத்யஜேத வா: ஆகையால் யஞ்ஞோபவீதியே அத்தியயனம் அத்தியாபனம் யஜனம் யாஜனம் இவைகளைச்செய்வான் என்றுவிதியுளது; அப்படியேஎல்லாஸ்மிருதிகளும் கல்பசூத்திரங்களும் கூறிநிற்கின்றன. இஃது என்றெடுத்த யஞ்ஞோபவீதம் வேதவிதிப்படி முப்புரினூலேயாமென்க. அதுகன்மங்களுக்கேற்றவாறுமூவகைப்படும். தைவகர்மத்தில்உபவீதமும், பிதுருகர்மத்தில் பிராசீனுவீதமும், மனுஷியகர்மத்தில்நிவீதமுமாம் என்று "உபவீதம் தேவாநாம் ப்ராசீநாவீதம் பித்ரூணாம் நிவீதம் மநுஷ்யாணாம்" என்றும் யஜ்ஞோபவீதே தேவவிபரீதம் ப்ராசீநாவீதம் ஸம்வீதம் மாநுஷம் என்றும் ரூபிக்கப்பட்டன. இதில் யஞ்ஞோபவீதமென்பதும் உபவீதமென்பது ஒருபொருட் கிள்விகள். உபவீதமென்பது தேவகாரியங்களில் இடதுபுறத்துத்தோளினின்று கொப்புள்வரைதரிக்கப்படுவதாம். அஃதே மாற்றப்பட்டு பிதுருகாரியங்களில்வலபுறத்துத்தோளினின்று கொப்புள்வரைதரிக்கப்படின் அது பிராசீனுவீத மெனப்படும்; மானுஷகாரியங்களில் கழுத்தில் மாலைபோல்தரிக்கப்படுமாயின் நிவீதமாம் பிராணுவீதம் ஆவீதமெனவும் நிவீதம் ஸம்வீதமெனவும் முதுநூல்களில் வழங்கப்படும் தேவகாரியமென்பது அக்கினிஹோத்திராதிகளை பிதுருகாரியமென்பது தென்புலத்தார்கடன் இறந்தவர் சடங்குமுதலிய பிதுருகாரி

யப்பிரேதகாரியங்களை; மானுஷமென்றது மனுஷ்யயஞ்ஞரிஷிதர்ப்பணங்களை மற்றுமலஜலவிஸர்க்க சௌசாதி சிலகன்மங்களில் புறம்மாலையாகத்தரித்தல் உண்டேயெனின் அஃது கர்ணவேஷ்டி நிவீதமும் (காதிற்சூழப்பட்டநிவீதம்)| உபவீதத்திலேயே அடங்குமென்க. வைதீககர்மங்களாகிய பஞ்சமகாயஞ்ஞங்கள் முதலியன நித்ய நைமித்திக காமிய பாகுபாடுபெற்று தைவமானுஷபித் திரியங்களுளடங்கி நிற்றலால் ஈண்டு அஃது பொதுவாய்க்கர்மாங்கமெனப்பட்டதென்க,

அவதரணிகை

அற்றேல் கர்மாங்க யஞ்ஞோபவீதம் தரித்தவரும் பிராமணர், இக்த ஞானங்க யஞ்ஞோபவீதத்தைத்தரிப்பவரும் பிராமணரோவென்றுசங்கைநிகழ. அவ்வாசங்கையைத்தொலைப்பாராய் அடுத்தமந்திரத்தைக்கூறுகின்றார்.

ஶிவாஜா நமயீஶவஸ்ய உபவீதம்ய தநயம்|
ஸ்ராஹ்மண்யம்ஸகலம் தஸ்ய இதி ஸ்ரஹ்மவிதோவிது:||

(இ — ள்.) எவனுக்கு ஞானமயமான சிகை யுளது? ஞானமயமான உபவீதமுளது? அவனுக்கு பிராமண்யம் பரிபூர்ண மெனபிரம்மமறிந்தபெரியோர் கூறுவர்-

(வி -- ரை) பிரம்மமறிந்த பேரியோரென்றதனால் கர்மானுஷ்டானத்தால் சித்த சுத்தி பெற்று பிரமானுட்டான பாக்கிய சாலிகளாய் அத்யாச்ரமமடைந்து ஆசிரியன் அடித்தொண்டு புரிந்து ஆன்மசொரூபத்தை கேட்டுச் சிந்தித்து தெளிந்த பெரியோர் குறிக்கப்பட்டார் அவர்சர்வகர்மங்களின் பரமபிரயோஜனமான சித்தசுத்தி பெற்றவர் அவருக்கு பிராமண்யம் பரிபூர்ண மென்றதால் யஞ்ஞோபவீத ஸம்ஸ்காரம் பெறாதார்க்கு பிராமண்யம் உண்டாயினும் சரமாசிரம பரியந்தம் சென்றவன்றே பரிபூர்த்தியாமெனவும் குறிக்கப்பட்டது. இதனால் அப்பிராமணருக்கும் அறிவொன்று கொண்டே பிராமண்யம் நிலைக்குமென்ற ஆதுனிகர்வாதம் தொலைக்கப்பட்டதாமென்க இதன் விரிவை முறைப்படி வஜ்ஜிரசூசிக உபனிஷத்தினுரையிற் காணலாம்.

அவதரணிகை.

அற்றேல் மேற்குறித்த ஞானயஞ்ஞோபவீதிக்குக் கர்மாங்கய ஞ்ஞோபவீத மின்மையால் கர்மப்ப்ரம் சம்(கர்மத்தினின்று வழுவுதற்கு) குறைவாராதோவென நிகழுமாசங்கையையடுத்தமந்திரத்தால்ம றுத்தொழிக்கின்றார்.

இதம் யஜ்ஞோபவீதம் து பரமம் யத்பராயணம்|

ஸ வித்வான் யஜ்ஞோபவீதீ ஸ்யாத் ஸ யஜ்ஞஸ்தம் யஜ்வானம் விது:॥

(இ—ள்) இது பரமமாயும் பராயணமாயும் உள்ள யஞ்ஞோபவீதம் இதனைத்தரித்தவனே யஞ்ஞோபவீதியாம்; அவனே யஞ்ஞமாம் அவனேயஜ்வாவாம் எனவும் (அவர்) அறிவார்

(வி—ரை) பரமம் என்ற சொல்லை முன்யஞ்ஞோபவீதமந்திரத்திற்றானே விரித்தோம், பராயணம் என்பது ஸ்ரேஷ்ட மார்க்கத்தைக் கூட்டும் கருவியென்பொருள் கொடுப்பதாய் ப்ரம்ம கைவல்ய சித்தியைக்கொடுக்கும் கர்ம மார்க்கத்தின் பயன் தூமாதிமார்க்கமென்று பிதுருயானமும், ஸவிசேஷப் பிரமோபாஸ்தியாகிய சகுணோபாஸ்திக்குப் பயன் அர்ச்சிராதி மார்க்கமாக உபநிடதங்கள் கூறிநிற்றலால் பராயணமென்று அவ்வீரயனங்களிலும் (மார்க்கங்களிலும்) மேலானதாய் இப்ரம்மகைவல்லிய மெனப்படும். "ஸத்ருஷ்டவ்ய ஹஸஹஸ்ரநேதெ ஸத்ருஷ்டவ்ய ஹணீயதெ என்பதாதிசுருதிகள் கூறிய ப்ரமீபாவம் இங்கு அக்ஷர ப்ரம்ம ஐக்யோபாஸ்தியின் பிரயோஜனமாகக்குறிக்கப்பட்டது. அக்ஷர பிரமைக்கியஞானமே பலீபூத (பரமபிரயோஜனமாயுள்ள

ள) ஞான்மாதலால் அதைப் பெற்றவனே ஆத்மயாஜியென்றும்' ஞானி யென்றும் யஞ்ஞ தீக்ஷிதனென்றும் புகழப்பட்டான். அவனே யஞ்ஞம் அவனே யஜ்வா (யாகம்செய்பவன்) என்றதனால் ஆக்குவோனும் ஆக்கப்படுவதும் ஒன்றேயாமென்ற அபின்ன நிமித்தோபாதான காரணகாரிய ஐக்கிய ஞானம் ஆத்மயாஜி இடம் சிறப்பிக்கப்பட்டதாம்.யாகதீட்சையின் கண் || அந்ருதாத் ஸத்யமுபைமி ||பொய்யைவிட்டு மெய்யைப் பெறுவேன் எனச்சங்கற்ப மிருப்பதால் அதற்கேற்கச் சத்யமாகிய பரப்பிரம்மைக்கியம் அட்சரபரப்பிரம்மைக்கிய விஞ்ஞான யஞ்ஞோபவீததாரணத்தாற்றான் கிடைக்குமென பது,முடிந்தகருத்து.

அவதரணிகை,

மேற்கண்ட அட்சர பரப்பிரம்மோபாஸ்தியே பிராமணிய பரிபூர்த்தியேதுவாதலால் அவ்வுபாஸ்தியில் (வழிபாட்டில்) முக்கியவிஷயமாயுள்ள பிரமத்தின் சொரூபம்யாது? அதை எவ்விலக்கணமுள்ளதாயுபாசிக்கவேண்டும். அதற்கதிகாரிகள் யாவர்என்பதாதி பல சங்கைகள் கேட்போருக்குண்டாமாதலால் அட்சரப்பரப்ரம்ம சொரூபத்தையும்,அதனை வழிபடும் முறையையும்;அதன் அதிகாரிகளையும்,பலனையும் முறையே குறிப்பாராய் முதல் வஸ்து நிர்த்தேச மகாமந்திரத்தையருளிச்செய்கின்றார்

ஏகோ தேவஸ்ஸர்வபூதேஷு கூட:
ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா |
கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ:
ஸாக்ஷீ சேதா கேவலோ நிர்குணஶ்ச ||

(இ — ள்.) ஒரேதேவன் எல்லாப்பூதங்களிலும் மறைந்தவன்; எல்லாவற்றையும் வியாபித்தவன்; எல்லாப் பூதங்களுக்கும்அந்தராத்மாவாயுள்ளவன்; கன்மங்களுக்கதிபதி ; சர்வபூதங்களுக்கும் வாசஸ்தானம்; சாட்சி சேதனன கேவலன் நிர்க்குணனும்என்பது.

(வி — ரை.) ஒரேதேவன் என்றது மேற் குறித்த [illegible] ப்ரம்மத்தையே. தேவனென்றால் இங்கு சைதன்யமாத்திரத்தையே குறித்ததாம். ‘[illegible] தேவ உச்யதே ’என்று’ தேவனென்னும் சொல்லுக்குப்பொருள் சிவாதிமூர்த்திகள் கடந்த அமூர்த்த சித்கனவஸ்துவேயென ஞானவாசிட்டாதிநூல்கள்குறித்தவாறு இங்கு தேவனென்றது சத்த ஸ்வ ப்ரகாச சைதன்யம்” ‘தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் ததநுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாபவத்’ அதை அவன் படைத்து அதனுட்புகுந்தான். பிறகு சத்தும் மற்றதுமானான் என்று சுருதிகள் கூறியவாறு ஒரேதேவனென முன்காரணாவஸ்தையைக்கூறி அவனிடம் தோன்றிய வெருவான (பலவாபாகும்) சங்கற்பத்தால் அவனுக்கமைந்த சொரூபத்தை எல்லாப்பூதங்களிலும் என்பதாதியாற் குறிக்கின்றார். எல்லாப் பூதங்களிலும் மறைந்தவன் என்றதனால் பூதங்களால் மறைக்கப்பட்டு நிற்பவன் அவனே யாமெனக் குறிக்கப் பட்டது. எல்லாப் பூதங்களென்றதால் பூதங்கள் பலவாமெனவும், ஒரேதேவனை அவைகள் மறைத்தனவெனவும் கூறியதால் பலவுபாதிகளிலும் தனியே தோன்றினும் ஆன்மா ஒருவனேயென வேற்பட்டது. எல்லாப்பூதங்களாலுண்டாகிய சரீரங்கள் எல்லாப் பூதங்களெனக் காரணலட்சணையால் தங்கத்தாலாயதை தங்கமென்றவாறுகுறிக்கப்படும். அங்ஙனமாயின் “[illegible]

ஏகஸ்தேவஸ்ஸர்வபூதேஷு கூடஃ. ஒரே பூதாத்மா பூதங்கள்தோறும் கலந்துநின்றான் என்பதாதி பலசுருதிகளிற்சொல்லப்பட்ட ஆத்மசொருபைக்கியம் இதனால் அட்சரபரப்பிரம்மமாக்கப்பட்டது. பூதங்களின்மறைந்தான் என்றதனால் பூதங்கள் நாமரூபங்களேயாதலால் அவற்றுள் மருவிநிற்கும் சச்சிதானந்தங்கள் ஆகிய அஸ்தி பாதி பிரியாம் சங்கைகளே உள்ளன. தேவனொருவனும் அவன் பூதங்களில் மறைந்தவனும் இருக்கின்றமையால் அவனது சர்வபூத அந்தர் வியாப்தி குறிக்கப்பட்டது. இதனால் எல்லாப்பூதங்களிலும் ஜீவரூபனாய் உட்பிரவேசித்தவன் அவனேயெனப் புலப்படும். அற்றேல் மேற்குறிக்கும் சர்வ வியாபியும்(எல்லாவற்றையும் வியாபித்தான்) எல்லாவற்றிற்கும் அந்தர்யாமி என்பதாதி இலக்கணங்களவனிடத்துப் பொருந்துமாறெங்ஙனம்? அவையெல்லாம் பரமான்மாவுக்கல்லவோ? பொருந்துமெனில் அற்றன்று இம்மந்திரத்தின் துவக்கத்தில் ஒருவனேயென்றும் இறுதியிற் கேவலனென்றும் இரண்டாம்பொருளுண்மை மறுக்கப்படுதலினும் இவ்வுபநிடதத்தில் இப்புருடனுக்கு நான்குஇடங்களெனத் துடங்கி இடையே 'அங்குலகங்களுலகங்களாகா' என்றதனையே இறுதியிலும் சாக்கிரத் ஸ்வப்பனங்களனுபவிப்பவன் ஜீவனேயென்றங்கு நிரூபிக்கப்படுதலாலென்க. அட்சரப்பிரம்மைக்ய வித்தையே மீண்டுபிரஸ்தாபிக்கப்படுதலால் அவ்வட்சரம் எங்கும் வியாபித்ததெனை அதன்வெளிவியாத்தியையும் எல்லாவற்றையும் வியாபித்தலின்என்ற சொல்லாற்குறிக்கின்றார். இனி வாயு வாகாசம் முதலிய ஜடவஸ்துக்கள் உள்ளும் வெளியும்வியாபித்து நின்றது போல் இவனும் வியாபிப்பானோவென விபரீதாசங்கைநேராவிடினும் சரீரத்தை வியாபித்த சரீரி சரீரத்துக்குசொரூபம் கொடுப்பவனாய் அதுவே சேதனமென மயக்கத்தக்க நிலைமையில் அமைத்தாண்டு அதனுளே தாமும் அபிவ்யக்தி அடைந்து நிற்றல்போல் பிருதிவி முதல் ஜீவனீறாக உள்ள எல்லாவற்றையும் தம் சரீரமாய்ப் பெற்றுச் சன்னிதி மாத்திரையில் அவைகள் சேதனப்போலிகளாய் விளங்கச்செய்யும் பெருமை அப்பொருளேயெனக்கு

றிக்கின்றார் எல்லாவற்றிற்கு மந்தராத்மாவாயுள்ளவன் என்றதனால் பிருகதாரணியகம் அந்தர்யாமி பிராமணம் கூறிய வாறு சமஸ்த பூதங்களையும் இயக்குவிப்பா னவனே யென்று ஏற்பட்டது. ஆயின் சேதனை சன்னிதியில் அசேதன சிதாபாஸங்களான சரீர ஜீவர்கள் தத்தம் தொழில்களை நடாத்துவாராயின் அக்கன்ம பலனை யனுபவிப்பதும் வித்யோபாதி களேயெனு ஆசங்கை தலை நீட்டாது சூரிய சன்னிதியில் உலகம் சேஷ்டிக்குமாயினும் அவற்றின் பயன் அதனையே சாருமன்றிச் சூரியனைச் சாருவதல்லாமைபோல் வித்யோபாதிகள் கர்ம பலதாதாவே யன்றி கர்ம பலபோக்தா ஆகானென்பதைக் கர்மங்களுக்கதிபதியென்ற விசேஷணத்தால் காட்டுகின்றார். இவனே நற்கர்மங்களைச் செய்விப்பான் என்ற பல சுருதிகளும் இக்கருத்தே கொண்டு முடிந்தன வாமென்க. இங்ஙனம் ஒரே தேவனெல்லாப்பூதங்களினும் அடங்கி எல்லாப்பூதங்களினும் வியாபித்து எல்லாப் பூதங்களையுமியங்கச் செய்து அவற்றின் தொழிலுக்கு ஏற்றப் பயனளிப்பானாயின், அவன் சன்னிதியில் சேஷ்டிக்கும் பூதங்கள் எங்குற்றனவெனின் அங்கே யுற்றனவாமெனக் காட்டுவது அடுத்த விசேஷணமாம். சர்வ பூதங்களுக்கும் வாசஸ்தானமாம் என்றதனால் ஒருவனிடத்தே எல்லாப் பூதஙளும் உள்ளன வென்றாயிற்று. ஒருவனுடைய சேதனனிடத்து அனேக பூதங்ககள் தனித்திடம் பெற்றால் அவ்வப் பொருளுக்கும் இடவேற்றுமை கூறவேண்டுமாதலின் அவைகள் நின்ற இடமொழிந்த மற்றையவிடமே இவன் வியாப்திக் கிடமாயின் இவன் அகண்ட பரிபூர்ண விலக்கணம் பெறுதல் கூடாது. அவனுக்கு மேற்குறிக்கப் படும் கைவல்யமும் அடியிற் குறிக்கப்படும் ஐக்கியமும் அவலமாமெனின் அவனிடத்து இவையெல்லாம் கற்பிதம் என்றும் சுத்த நிர்க்குணகேவல சைதன்னிய திருக் மாத்திரமே அவன்சொரூபமென அற்றடியால் விரிப்பாராய் முன்னர் சர்வ பூதவாசஸ்தானம் என்றதனால் வேறு ஆதாரங்கள் இப்பூதங்கட்கில்லையெனவும் பூதங்களெல்லாம் அவனையே பரமாதாரமாகக் கொண்டு அதிட்டான சத்

லத்தயினால் உசசீவிக்கின்றன வெனவும் ஏற்பட்டதாம். "சாட்சீ" மேலே காண்பவன் ஐம்புலன்கண் மனம் முதலியபுறக்கருவி, அகக்கருவிகளைக்கொண்டு அறியும் இயல்பினரான ஜீவகோடிகளின் வேற்றுமை சுத்தான்ம சொரூபத்திலி தனாற்காட்டப்பட்டது. சேதனன்- என்றதனால் இவனன்றி மற்றவை ஜடமெனவும், கேவலனென்றதனால் சஜாதி விஜாதிகளான இரண்டாம் பொருளற்றவனெனவும், 'நிர்க்குண " னென்றதால் தம் முன் யெவ்வித குணங்களும் ஏறப்பெறுதவனெனவும்பொருளாயிற்று. இங்கு நிர்க்குணனென்று குறித்தமையால் சவிசேஷமானது பிரமம் உபாஸனைக்கென கற்பிதமென்றே யாயிற்று. இங்கு நிர்க்குணமும் என்று உம்மைத்தொகை காணுதலால் நிர்க்குணமும் சகுணமுமான இரண்டுருவங்களும் ஈசனுக்குச் சகஜமேயாமென்பர் ஓர் சாரார். இவரே வைகானசரும் ஸ்ரீ கண்டமதத்தியோருமாவார். நிர்க்குணமென்றுகுறிக்கும் வசனங்கெல்லாம் ஹேயகுணங்களில்லாதகன் (குற்ற முற்ற குணமற்றவன்) என்பார் மற்றோர் சார்பார். இவர் ராமானுஜமத்வராதியோர. இவர் இருவரும் கொள்ளும கொள்கை முற்கா ண்ட விசேஷணங்களால் அமையாதாமென்க. கேவலன் என்றது சஜாதீயமான இரண்டாம்பொருள் அமைப்பிலாதவனெனப் பொருள் வைத்துக் கொள்வோம். ஒருவனென்றது விஜாதீயமான இரண்டாவதைப் பெருதானென்றல்லவோ பொருள் கொடுக்கவேண்டும். அல்லது கேவலன் என்றதை விஜாதியான இரண்டற்றவன் என்றபொருளில் அமைத்தால் ஏகனென்பது அதன் பொருளில் அமையும். இவ்விருசொற்களையும் ஒரு பொருளில் கொண்டு,கூறியது கூறல், பயனில் கூறல்; மிகைபடக்கூறல் முதலிய குற்றங்களுக்கு இடமாக்குதல். என்றொன்றும் பெருந்தவறேயாம் " ஏகமேவாத்விதீயம் " (ஒன்றேயுள்ளது இரண்டற்றது என்றவிடத்தில் இரண்டற்றதென்றதனால் ஒரு வேற்றுமையும், ஒன்றென்றதனால் மற்ற வேற்றுமையும் தேற்றத்தால் மற்றொ

ரு வேற்றுமையும் குறிக்கப்பட்டது போல் ஈண்டும் தேவன் முதலிய சொற்களிலமைந்த ஒருமைக் குறியால் ஒரு வேற்றுமையும், ஏகமென்ற சொல்லலால் மற்றொரு வேற்றுமையும், கேவலனென்பதால் ஒரு வேற்றுமையும், மறுக்கப்படும். ஆயின் மூவேற்றுமைகளு மற்றதோர் பொருளே இங்கு குறிக்கப்பட்டதெனல் வேண்டும். அதற்குறித்தான் பொருள் மற்றொன்றிலையாயின் குணங்கள் தானெதற்கு? வாச்சல்யம், ஔதார்யம், காம்பீர்யம் முதலிய நற்குணங்களெல்லாம் பிரமத்துக்கான் மோபகாரமாகாது பரோபகாரார்த்தமல்லவோ இருக்கவேண்டும். இரண்டாம் பொருளாய் வேற்றுமைப் படத் தோன்றும் பிரபஞ்சமெல்லாம் பிருமத்திடமில்லை யென இவ்வுபநிடதமே துவக்கத்திற் கூறியமையின் இதர சம்ஸ்காரார்த்தமான குணங்கள் ஈசனிடத்து இலையாமென்பதே உபனிடதத்துணிவாம் அஃதுண்மையாயினும் அவித்யா நிவிர்த்தி வரும்வரை அதனை யாம் எவ்வித மறிவது அன்னிர்க்குணன் மானுபவத்திற்குப் பிராபஞ்சிக பேதவாசனைபெருந்தடையே யெனில் பத்தான் மாக்களாய் உம்மினத்தாரை நோக்கி உண்மைத்தொகையால் உபாசனை அர்த்தமாய்க் கற்பிதமான சொன்னாம் சொல்லப் போவதுமான சவிசேஷபிரம சொரூபத்தை அவியாஜகருணாநிதியாகிய வேத புருஷன் விளக்கியே நின்றனனென்க. அதுகொண்டே ஸ்ரீ ஸ்ரீ கண்ட சிவாசாரியரும் சவிசேஷ பிரமவாதம் செய்துவருமிடையே நிரன்வயோபாஸ்தி அதாவது நிர்க்குணோபாஸ்திக் குப் பெருமையை மிகுதியுங்கூறினர். நிர்க்குணத் தன்மையும் சகுணத்தன்மையும் ஒன்றுக் கொன்று விருத்த ப்பொருளாதலால் அவைஒரிடம் ஒருங்கு சேர்வது கூடாதுஅற்றேல் சத்திய காமன், சத்திய சங்கற்பன் முதலிய திவ்ய குணங்கள் அப்பொருளிடத்து அனேக வுபனிடதங்களால் கூறப்பட்டனவே அவை யெலாமவலமேயெனின், அஃது ஆராய்ச்சியிலாதார் ஆசங்கையேயாமென்க. பிராணன் ஆகாசம் முத

லிய ஜடவஸ்துக் களைப் பிரம்ம மென்று பாசிக்கும்படி விதித்த சுருதிகளுக்கும் அபரிச்சின்ன பரிபூர்ண வஸ்து வைத்தகர வித்தை, அந்தராதித்த வித்தை, வைசுவாநர வித்தை, அட்சி வித்தை முதலிய பல வித்தை களம்பரிச் சேதப்படுத்தி உபாசிக்கும் படிகூறியவாறும் இவையெலாம் கௌணவாதமேயாமென்க. அபரிபக்வான்மாக்களுக்கு பாலோபஸ்வனம் (பிள்ளைகளுக்கு விளையாட்டுக்காட்டல்) நியாயத்தால் இவ்வசனங்கள் பிரவர்த்தித்தனவாம். உபநிடதங்களில் வாக்கைத்தேனுவாக (பசுவாக) உபாசிக்கவேண்டுமென்பதாதி பலவசனங்கள் உள்ளனவாதல்போல் இதுவுமாமென்க. அவ்விதம் உபாசனார்த்தமாய் ஈசனிடத்து அனேகநற்குணங்கள் உபநிடதங்களால் ஏற்படபட்டு துதிக்கப்பட்டினும் உண்மையிலவை நிர்க்குணங்களென்பதற்கு யாதும் தடையில்லையாம் என்பது

அவதரணிகை.

மேற்கண்ட திவ்யலட்சணம் பொருந்தியபரமபுருஷனை எவ்விதவிலக்கணத்துடன் எவ்விதம்வழிபட்டு எப்பயனைப்பெறலாம் என வினவையெதிர்பார்த்து அடுத்தமந்திரத்தை அருளிச்செய்கின்றார்

𑌏𑌕𑍋 𑌵𑌶𑍀 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾
𑌏𑌕𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌯𑌃 𑌕𑌰𑍋𑌤𑌿
𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌥𑌂 𑌯𑍇𑌽𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌧𑍀𑌰𑌾𑌃
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑍁𑌖𑌂 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌨𑍇𑌤𑌰𑍇𑌷𑌾𑌮𑍍 ॥

(இ — ள்.) ஸர்வபூதாந்தராத்மாவாயுள்ள ஒருவனே சுதந்தரனும். அவன் ஒருரூபத்தையே பலவாறாகச்செய்வான். ஆத்மாவினிடத்திலுள்ள அவனை எந்த தீரர்கள் காண்பார்களோ, அவர்களுக்கே சாசுவதமேதவிர மற்றவர்க்கில்லையாமென்பது

(வி—ரை.) சுதந்திரமென்றது அவித்தையால் பரதந்திரம் போற்றேன்றும் ஜீவான்மாக்களை நோக்கியே யன்றிச்சொரூபத்தில் மற்றவரைநோக்கி ஏற்படக்கூடிய சுவாதந்திரம் பாரதந்திரம் இரண்டும் இல்லையென்க. ஒரு ரூபத்தைப் பலவாறு செய்வான் என்றது பக்தர்கள் பாவனைகளுக்கு ஏற்றவாறு பலரூபம் அவருக்கு இருப்பினும் அவையெலாம் சொரூபமேயன்றி வேறில்லையெனக்குறித்தற்கே. ஆத்மாவினிடத்துள்ள அவனைக்காணவேண்டுமென்றதனுல் ஆத்ம சப்தத்தாற் குறிக்கப்படும் தேகம் முதல் ஜீவன் ஈருக உள்ள பதார்த்தங்களில் திலதைலாதி நியாயத்தால் அடியிற் குறிக்கப்படுமாறு தியானிக்கவேண்டுமென்ற கருத்தால். சாச்வதசுகமென்றது மோட்சம். மற்றவர்க்கில்லையென்றது "பிரத்தியகாத்துமைக்கிய புத்தியுடன் உபாஸிப்பது பேதவாசனையுடனுபாசித்தவர்க் கென்றதாம்.

அவதரணிகை-

ஆன்மாவில் உள்ளவனைக்காணும்படி கூறுகின்றார்.

ஆத்மாநமரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம் |
த்யாநநிர்மதநாப்யாஸாத்தேவம் பச்யேந்நிகூட
வத் ||

(இ—ள்.) ஆன்மாவை யரணியாகவும், பிரணவத்தை உத்தராரணியாகவும், வைத்துத் தியானமென்ற கடைதலை ஆவிர்த்திசெய்வதால் மறைந்திருந்ததுபோலுள்ள ஆன்மாவைப் பார்ப்பான் என்றது.

(வி—ரை.) அரணியென்பது அக்கினியை உத்பத்திசெய்வதற்காக உபயோகப்படுத்தப் படும் அரசுமுதலிய மரங்களின் ஓர் கட்டை; உத்தராரணியென்பது அவ்வரணியின் கண்ணூன்றிக் கடையும் ஓர் கருவியாயுள்ள மரத்துண்டாம். இவ்விரண்டும் ஒரு ஜாதியேயாதலால் இவ்விரண்டினிடமும் மறைந்துநின்ற அக்கினிப் பொறிகள் அம்மரத்தூள் உபாதிநீங்கத்தனித்து

ப்பிரகாசித்துத் தம் பிரகாசத்தை தடைசெய்த இரண்டு உபாதிக ளையும் கொளுத்துமியல்பினதாய்ப் பிரகாசிப்பதுபோல வஸ்துபிர காசிக்கும் எனப்பொருள்கொள்ளவேண்டும். ஆயின் ஆத்மாவே அரணியாகவும், பிரணவத்தை உத்தராரணியாகவும், நிரூபித்த இந்த இடத்தில் அதர்வசிரஉபநிடதம், மாண்டூக்கியவுபநிடதம் குறித்தபடி பிரணவமென்றது பிரணவத்தாற் குறிக்கப்படும் ஈசுவரனையே யாமென்க. அரணி உத்தராரணிகளாகிய இரண் டிடத்திலும் சுத்த சைதனியமயமாய்ச் சோதி ஒன்றே அடங்கியு ளதாம்; அப்பிரகாசமான மரத்தூள்களும் சுவப்பிரகாசமான அக் கினியும் கலந்திருந்த அவஸ்தையைக் கடைதலுக்கு முன்மரமே யென்றுப்பார்பவர் கண்டாற்போல் சேதனுசேதனங்கள் கலந்து நின்ற காலத்தில் அது அசேதனமயமாகவே தோன்றிற்றென் றும், அவித்யோபாதிகளை (ஜீவனை) துளைத்து (அந்தர்யாமி யைத்தியானிப்பதற்காக அவனுக்குள்ளே இடம் கற்பித்து) அங் குவித்யோபாதிகளை (ஈசனை) நட்டு = ஊன்றி (அதாவது உள்ளே உள்ளவன் போல் தியானித்து) அந்த தியானத்தை யும் இடையறாது செய்யவேண்டுமென முடிந்தகருத்தாம். மறை ந்தவன்போல் நின்றவனென்றதனால் கடைதலுக்கு முன்னரும் அக்கினியால் சுவப்பிரகாசத்தன்மை கெடவில்லையெனவும்கடை தலறியாதவர்க்கு காஷ்டத்திலக்கினிபோலப் புலப்படாதெனவும், சொன்னவாறாயிற்று. மேற்குறித்த ஆன்மபிரணவங்கள் ஒரு ஜாதியும் அதன் உபமானமானவக்கினியைத் தடுத்த மரம் ஒரு ஜா தியுமாதலின் சைதன்னியமேஇரண்டுமெனவும்,அசேதனஜாதியே அதை தடுத்திருந்த உபாதியாமெனவும் சொல்லாதமைந்த தாம் திருஷ்டாந்தத்தில் அரணி உத்தராரணிகளில் மறைந்து கிடந்த பிரகாசத்தை அப்பிரகாசத்தன்மையுடைய மரத்தினிடம் தோ ன்றிய சுழலும் தொழிலே வெளியாக்கினமைபோல் தார்ஷ்டா ந்திகத்தில் ஜீவேசுவரர்களிடம் உள்ள சுத்த சைதனியத்தை உபாதிவிலகி பிரகாசிக்கச்செய்வது.' அசேதனவுபாதியின் தொ ழிலாகிய யோகாதிகளே யென்றதாயிற்று. ஒரே மரத்தின் ஓர் பலகையில் ஒரு புறம் உத்தராரணியும் ஓர் புறம் அரணியும்உண் டாவதுபோல மாயாவித்யோபாதி பலத்தால் அனுதியிலேயே ஜீவேசுவரபேதம் அமைந்ததென்பதும் திருஷ்டாந்தத்தால்

றியவேண்டியதொன்றே. தியானமென்ற கடைதலையும் ஒரேமு றை செய்வதால் அங்கு பயனுண்டாகாததுபோல் இங்கும் பயனு ண்டாகாதாம். கடைதலாலுண்டானவையென உபசரிக்கப்படும் தீப்பொறிகள் அவற்றை தம்முள்ளடக்கிவைத்துக் கொண்டு தம் மிடம் பிரகாசிக்கவொட்டாது தடுத்தமரத்தைக் கொளுத்தித்தொ லைப்பதுபோல் தியானத்தால் தோன்றும் மகாக்கினி சொரூப மான ஆத்ம சைதன்யம் அதைத்தன்னுள்ளடக்கி இயல்பு விளங் கவொட்டாது தடுத்த மாயாமய சரீரங்களின் செய்கையாகிய தி யாஞோபாஸநுதிகளாலேயே விளங்கிட அவ்விடத்துமாயா வித் யாகாரியங்களான பிரபஞ்சங்களை யொழித்து ஸ்வப்ரகாசமாய் விளங்குமாம். அஃது இயல்பில் தடைபடாததும் தடைப்பட்டத் தக்க ஜாதிபுமன்ருதலின் மறைந்திருந்தது போலுள்ளவென்று போன்மை குறிக்கப்பட்டதாம்; தேவனென்றது ஆன்மாவைக் குறிக்கும் சொல்லாய் மூலத்திலமைக்கப்படினும் அது பிரகா சாத்மாவையே குறிக்குமாம். ஆயின் ஆத்மாவிடம் நிருபாதிக சொரூப விளக்கத்திற்குச்சேதனன் தொழிலே காரணமென்பதா யிற்று. இங்குள்ளரகசியமிது. ஆன்மா அரணிஸ்தானனுதலாலும் அவனிடத்தமைந்த கடைதலென்ற கிரியையால் ஆத்ம சைதனி யம் விளங்குமெனக் குறித்தமையாலும், அவ்விளங்கப் பெறும் ஆன்ம சைதனியத்துக் கான்மாவே உபாதானமான மையாலும் மற்று அவ்வுபாதானமாகிய ஆன்மாவே இங்கு தியானமென்ற கடைதலைச் செய்வானன்றி வேறு நிமித்த காரணமொன்றின் மையாலும், வித்தையின் காரியமென்றுபசரிக்கப்படும் ஆத்மத ரிசனத்துக்கு அபின்ன நிமித்தோபாதானமாய் நிற்பது ஆத்துமா வே ஒருவனென்று காட்டப்பட்டதாம். ஆயின் இதேதிருஷ்டா ந்தத்தால் சமஸ்த பிராபஞ்சிக வஸ்துக்களுக்கும் அபின்ன நிமித் தோபாதானமாவது சயிதன்னியமேயென்றது சொல்லாதமைந் ததாம். மேலும் அரணி உத்தராரணிகளில் அமைந்திருந்த அக் கினிப் பொறிகளுக்கு வேற்றுமையில்லை என்பது போல் ஜீவேசு வரர்களுக்கும் சைதனியாம்சத்தில் ஒற்றுமை சித்தித்தது; ஸுநியபுவெஸ்ஃ என்பனவாதி வசனங்கள் இதே கருத்தில மைந்தவையாம். அக்னி தீபப்ரதீபங்களில் (தீபமென்பது காரிய மாய் நிற்கும் தீபம் ப்ரதீபமென்பது காரணமாய் நிற்கும் தீபம்)

தொடர்ந்துவருவதுபோல குரு சிஷியர்களில் ஆத்ம சைதனியம் தொடராதெனவும் அது தன்னிடம் விளங்கவொட்டாது தடுக்கும் உபாதிதன்தொழிலாலன்றி நசிக்காதெனவும் அத்தொழிலே தியானமாமெனவும் கூறியதே இவ்வாக்கியமாம். முன் தடைபட்டது போலிருந்ததேவனை (ஆன்மாவை) காண்பான் என்றதனுல் ஆன்ம தரிசனத்திற்கு இடையருது செய்யப்படும் கடைதல் போன்றதியானமே சாட்சாத் (நேரில்) எதுவெனக் குறிக்கும் முகத்தால் நிதித்தியாஸனம்என்ற தெளிதலே அதற்குமுக்கியகாரணமென்றும் அதற்குச் சிரவணுதிகளே காரணமாமெனவும் விசாரத்தாலன்றி வேறெவ்வழியானும் பிரமஞானம் பிறவாதெனவும் விசாரம் செய்வது ஆவசியகமெனவும் இம்மந்திரத்தின் முடிந்தகருத்தாம்.

அவதரணிகை.

மறைந்தது போலவென்ற ஆன்மாவைக் காண்பானென முன்மந்திரத்திற் குறித்தமையால் எங்ஙனம் மறைந்தவன் ஆன்மாவெனச்சிடர்க்கு ஆசங்கைநிகழாதபடி உதாரணங்களால் விரித்துக் காட்டுகின்ருர்.

திலேஷு தைலம் ததநீவ ஸர்பிராப꞉ ஸ்ரோதஸ்வ

ரணீஷு சாக்நி꞉ । ஏவமாத்மாத்மநி க்ருஹ்யதேஸௌ

ஸத்யேநைநம் தபஸா யோநுபஶ்யதி ॥

(இ — ள்.) எள்ளுக்குள் எண்ணெய் போலும் தயிரில் நெய் போலும் பிரவாகத்தில் நீர் போலும் அரணியில் அக்னிபோலும் இவ்வான்மா ஆன்மாவிடத்திலே உண்டாகிருன். சத்தியத்தாலும் தவத்தாலும் என அறிவான்(அவனுக்கே) என்பது.

(வி — ரை.) அரணியில் அக்னி என்ற திருஷ்டாந்தம் முன்காட்டப்பட்டமையால் மேல் மூன்று திருஷ்டாந்தங்கள் இங்கு காட்டப்படுகின்றன. இதில் ஆரம்ப சம்ஹதி,விகார விவர்த்

தவாதங்களில் அரணிஅக்னி; திலதைலம், தயிர்நெய், நீர்ப்பிர வாகங்கள் திருஷ்டாந்தங்களாம். ஆரம்பவாதத்தில் காரிய காரணங்களுக்கு வேற்றுமை நிச்சயமாதலாலும், சம்ஹதிவாதத்தில் அங்ஙனமேயாதலாலும், பரிணாமவாதம் அச்சாயையே அனுசரிக்குமாதலாலும் விவர்த்தவாதமே சித்தாந்தமெனக்காரிய காரண ஐக்கிய நிரூபண பரசாஸ்திரங்களின் கருத்தாம். அப்படியானால் ஆரம்பவாத பரிணாமவாதங்களைக் குறிக்கும் சாஸ்திரங்கள் அவலமோவெனின், சாந்தோக்யம் ஆரம்பவிகாரங்களை மறுத்தமையால் பௌத்தரோப்பிய சம்ஹதிவாதம் அவைதிகமாகையால் அவற்றை விலக்க எழுந்தது விவர்த்தமேயாமென்க. அதை முறைவிரிக்கின்றது இச்சுருதி. ஆரம்ப சங்காத விருத்தவாதங்கள் ஒருவாறு அவைதிகங்களேயாயினு மூலகத்தில் சேதனர்களுக்குண்டாகும் ஆத்ம விசாராங்கமான விர்த்தி விசேஷங்களையெடுத்தனுவதித்து மறுத்தல் வேதத்தினியல்பாதலால் அம்முறைபற்றி இவ்வசனம் எழுந்ததென்க. அற்றேல் திலதைலாதி திருஷ்டாந்தங்களால் சங்காதி வாதங்கள் வேதசம்மதமாகாதோவெனின் ஆராய்ந்திடுங்கால் அதெனக்கூடாதுகூறுக. மூன்றுமடியில் அறிவானையும் அறியப்படுவதையும் ஒருஜாதியாக்கி ஆத்மாவென்று நிர்த்தேசித்திருத்தலாலும் அறிவினிடமாய் ஆன்மாவிடத்துத் திருஷ்டாந்தங்களிலமைத்த பன்மையை உபமேயத்திலமைக்காது ஒருமையமைத்தமையாலும் கேவலாத்ம சைதன்ய விவர்த்தமே ஜடஜீவேச்வர பிரபஞ்சங்களென சொல்லாதமைந்ததாம். இனி திருஷ்டாந்த முறை பற்றிச் செல்வாம்; எள்ளுக்குள் எண்ணெய் என்னும் திருஷ்டாந்தம் சம்ஹதிவாதத்தை அனுவதித்து மறுத்து உண்மை விளக்கும். எள் என்னும் சொல்லுக்குத் திப்பியும் நெய்யும் கூடிய கூட்டுறவே பொருள் ஆனால் அதனிடத்தே அத்திப்பியும் நெய்யும் பிறந்தகாலம் எண்ணெய் பிண்ணாக்கென்ற பெயரும் அமைப்பு வேற்றுமையும் உண்டாவது பிரத்தியட்சம். எண்ணெய்க்காக எள்ளேற்றுக்கொள்ளப் படுகின்றதேயன்றி மற்று வேறெப்பயனுக்குமாகவில்லை. அங்ஙனம் ஆன்மாவிடத்து ஆன்மாகாணப்படுவானென்றவிடம் ஆன்ம சைதனியமும் உபாதியும் கலந்த ரூபம் ஒன்றும், உபாதி விலகிய ரூபமொன்றுமாம். உபாதியு

டன் கூடிய ஆன்மாவாகிய எள்ளினிடம் அமைந்ததைலமே இங்கு பரமாத்மாவெனக் குறிக்கப்பட்டமையால் எண்ணெய் எள்ளில் உபாதேயாம்சம்போல் ஆன்மாவிடத்து நிருபாதிக சைதனியமே விரும்பத்தக்கதாம். நெய்யுடன் திப்பிகலந்திருந்த காலத்து எண்ணெய் அறியப்படாதது போல் சைதனியம் அவித்தைத் தடைபட்டுள்ளவரை சொரூபம் விளங்காது என்றது குறிக்கப்பட்டது. எள்ளில் எண்ணெய் என்று திருஷ்டாந்தத்தில் யாம் அறியும் எண்ணெய் எள்ளிலமைந்ததன்றிவேறில்லை யாதலின் எள்ளு ஸ்தானத்திலுள்ள ஜீவசித்து உபாதிவிலகின சொரூபமன்றிப்பிரம்மம்வேறில்லையெனவிளங்கியது. எண்ணெயும் திப்பியும் தனிப்பொருள்களாகவே அவைகளின் கூட்டுறவால் பிறந்ததே எள் எனலாம்; அவ்வெள்ளினியல்பு திப்பியும் எண்ணெயுமன்றி வேறில்லை; ஆயின் உலகமும் ஜடசேதனசங்காத மாத்திரமே யென ஆசங்கை நிகழாவண்ணம் அறிவினிடத்துப் பன்மையும் அறியப்படும் பொருளினிடத்தொருமையும் குறிக்கப்பட்டது. சோபாதிகங்கள் உபாதியுடன் கூடி நிற்றலால் அவை யெங்கும் வேற்றுமையுள்ளன போற்றோன்றினும் அவற்றும் உபாதி வேறேயன்றி உபஹிதமானதைலம் ஒன்றே யாம். அங்ஙனம் ஆன்மா உபாதியுடன் கூடியவிடம் ஜீவனெனப்படினும் அஃது ஒழிந்தவிடம் ஆன்மாவேயன்றி அணுவாகமாட்டான். திலதைலங்கள் காரிய காரணங்களாய்நின்று வேறுவேறு அவஸ்தைகளைப் பெறினும் அணுதியில் ஒரு பொருளை மறுபொருளுடன் சேர்க்கும் ஸ்நேகம் என்ற குணம் எண்ணெயினதேயாதலால் அதன் வலிகொண்டே அதனைச் சுழன்று பிடித்து நெருங்கி அதனியல் வெளிவராது தடுத்திருந்த திப்பி எந்திரத்தால் வேறுபடும் காலத்து பரிபூரண ஏகரசதைலம் வெளிவருவதுபோல் ஆன்மாவிடத்து அணுதியே தோன்றிய பாவரூப அவித்தை யென்ற உபாதி விலகினுல் எஞ்சுவது ஏகரசாத்ம சொரூபமேயாம். அற்றேல் மேற்கண்ட திருஷ்டாந்தத்தால் ஜடசேதனங்கள் இரண்டும் தனிமுதல்கள் என்று ஏற்படாவோவெனின்? அற்றன்று;மேல் அவற்றை மறுக்கவே வேறு திருஷ்டாந்தங்களைக் கூறுதலால் தயிரில் நெய் என்ற திருஷ்டாந்தம் பரிணுமவாதத்தை எடுத்து மறுக்கின்றது. தயிர் கெடாது நெய் உண்டாவதில்லை. தயி

ரைக்கடைந்து அதனிடம் மோரையும் வெண்ணெயையும் பிரிக்கவேண்டும். அவ்வெண்ணெயை மீண்டும் உருக்கினால் அதுநெய்யாம். முன்திலதைல திருஷ்டாந்தத்தில் காரண ஜாதிகடினம்காரியஜாதிநெகிழ்வதுமாய்க் காட்டிக் கடினத்தினின்று நெகிழ்வதைப் பிரித்துக் காரணத்தை நிலச்சாதியாகவும் காட்டினாற்போல் அதற்கெதிர்மறையாய் நீர்ச்சாதியில் நிலச்சாதியை உண்டாக்கும் வழி இங்கு காட்டி மீண்டும் அந்நிலச் சாதிநீர்ச்சாதியாம் நீர்ச்சாதி நிலச்சாதியாம் என்று பிரவாகநித்தியவர்தமாகியபரிணாமவாதத்தைக் காட்டுகின்றார். முதலில் நீர்ச் சாதி தயிர். திரவமாகையால்; அதனிடத்துண்டாகும் வெண்ணெய் நிலச்சாதி; கடினமாகையால்; அதனிடம் உண்டாம் நெய் நீர்ச்சாதி நெகிழ்ச்சியுண்மையால்; அஃது குளிர்ந்துறைந்தவிடம் மீண்டும் நிலச்சாதிபோன்ற கடிமைதோன்றும் உருகும் உறையும் என்று; நாட் செல மாறிவரும். அங்ஙனம் ஜீவன் தயிருட் ஆன்மா நெய்யுமெனஇங்கு திருஷ்டாந்திக் கப்பட்டார். திலத்திடத்து வியாபித்த தைலம் நிலஸ்தானம் நோக்குவானுக் குப்புலப்படுமாறு தயிரில் வியாபித்த நெய் தயிர்ஸ்தானம் நோக்குவானுக்கு புலப்பட்டாமையால் அதனிலும் அதி சூட்சுமமானவியாப்தி இங்கு குறிக்கப்பட்டதாமென்க. இதில் தயிர் ஜீவனும் அதனிடத்தே வியாபித்து நிற்கும் வெண்ணெய் ஈசுவரனும். தயிரிடத்தில் அமைந்த ஒருவகை நீரும் புளிப்பு முதலிய குணங்களும் தம்மிடம் அமைந்த மதுரமான எண்ணெபோன்ற பிசுக்குள்ளநெய்யைத்தடுத்துத் தன்னினப்படுத்தித் தன்மயமாய்ப் புலப்படினும் அதனிடம் இருந்து கடைதலால் வெளிப்பட்ட வெண்ணெய் வெண்மையும் நெய்ச்சாதித் தன்மையும் பெற்றமையால் நீரில் ஒட்டாது வெளிவருகின்றது இங்கு வெண்ணெய் ஸ்தானம் ஈசுவரனென்க. இவ்வெண்ணெயிடத்தும் நெய்யினியலைத்தடுக்கும் வெண்ணிறமுள்ள ஓர் வகை வஸ்து எங்கும் வியாபித்து நிற்கின்றது. அங்கதுவும் தொலைந்தால் தனி நெய் வெளிப்படும். தயிரிடத்தமைந்த நெய்யின் உபாதி நீர்ச்சாதியும் புளிப்பும் சீக்கிரத்தில் மாறுவதும் ஆனதால் அவித்தை போன்றதாம். வெண்ணெயினிடம் அமைந்தஉபாதிநீருடன் கலந்து நின்ற நெய்யையும் அந்நீரின் குணங்களாய புளிப்பு முதலியவைகளைத் தம் முன் ஏற்காது காபாற்றித் தயிரைக்க

டைந்தெடுத்த வெண்ணெயை மீண்டும் அதில்போட்டாலும் அதிலது கலவாது தனித்து நிற்கும்படிசெய்து நெய்ஸ்தானத்திலேயே ஏற்றுகின்றமையால் அது ஈசுவரோபாதியானமாயைபோன்றதாம். சுத்தமான நெய்ச்சாதிக்கு வெண்ணெயும் தயிரும் இரண்டும் வேறுசாதியேயாம். ஆயின் தயிரின் பரிணாமம் நெய்யென உலகவழக்கமேயாயினும் உற்றுநோக்கினோர்க்குஓர் வகை நீரும் நெய்யும் கலந்தேதயிராதலால் நீர்பாகம் விலகியவன்று நெய் வெளியாயிற்றேயன்றி வேறில்லையாதலால் நெய் நெய்யாயிற்றேயன்றி தயிர் நெய்யாகமாறவில்லை. நெய்யை விரும்பித் தயிரைக்கொள்வார் என்றும் அதை விரும்பார்; அங்ஙனம் ப்ரம்மாநந்தத்தை விரும்பி ஜீவசொரூபானுசந்தானம் செய்வோர் என்றும் அதையே விரும்புவார் என்க. இங்கும் தயிர் பலவிதமாயினும் அதனிடத்தமைந்த நெய்ச்சாதிஒன்றே. உபாதியுடன் கூடிய தயிர் வெண்ணெய்கள் உபாதி விலகியவிடம் நெய்யேயாயெஞ்சுவன; அங்ஙனம் தார்ஷ்டாந்திகத்திலும்ஆத்ம ஐக்கியம்சொல்லவேண்டும். ஆயின் தயிரில் நெய்யென திருஷ்டாந்தித்தமையால் உண்மையில் ஆராய்ந்தால் பரிணாமவாதம் அசத்தியமேயென ஏற்படும். அற்றேல் அத்வைதவாதானுவாதி திருஷ்டாந்தம் யாதெனில் பிரவாகத்தின் நீர் என்றதால் அதை விளக்கிகாட்டுகின்றார். பிரவாகத்தில் நீர் அன்றி வேறுபொருள் காணப்படுவதில்லை. அஃது நீரேயாதலின் ஒரே நீருக்கு ஆறு, குளம், கடல் முதலிய வேற்றுமைகள் உபாதியாலமைந்ததுபோல மேட்டை விட்டுத்தாழ ஓடும் பெருநீர் பிரவாகமெனப்படும். அஃது தனக்கு இயல்பில் திரவம் (நெகிழ்ச்சி) ஒன்றையே குணமாய்ப்பெற்றிருப்பினும் நுரை அலை சுழிகுமிழி முதலிய பேதங்களைப்பெற்று வழங்கப்படுவதுபோல ஆன்மாவும் பலபேதங்களால் வழங்கப்படுகிறான். உண்மையிற்பிரவாகம் நீரேயாவதுபோல் இங்கும் அனாத்மாக்களெல்லாம் பரிசோதித்தவழி ஆன்மமயமேயாம். நீரில் சமஸ்தசேதன சரீரங்களையும் வளர்க்கும் தன்மையிருப்பினும் அஃது மேற்குறித்த அலைமுதலிய விபரீதங்களுடன் பெரும் பிரவாகமாயின் அதனெதிர்ப்பட்ட சரீரிகள் சரீரம் நிலைப்பதே மிகக்கடினமாதலால் அவ்விபரீதம் பிரவாகமாகிய ஔபாதிகத்திலேயன்றி உபாதிவிலகிய நீர் மட்டிலல்லவாதல்போலப்பிரபஞ்ச

துக்கமெல்லாம் சோபாதிகத்துக்கே யன்றி நிருபாதிகத்துக்கிலை யென்றதாயிற்று. எள்ளிற்றிப்பியும் தயிரில் மோரும் வேறு பிரிக்கப்படுவதுபோல் பிரவாகத்தில் நீரைப்பிரித்தல் எவ்வாற்றானும் இயலாதாம். இங்கு வறந்த என்னும் ஒரு சொல்லைவருவித்துப்பிரவாகத்திற் கூட்டிப் பொருளுரைத்தார் ஒருவர். அஃது அத்தியாகாரமென்ற வருவித்தற்குற்றத்தாலும் பிரவாகமென்றதற்கு உள்ளபொருளை விட்டு இடவாகுபெயராய்ப் பிரவாகமிருந்தவிடத்தைக் குறிக்கும் சொல்லாய் ஆக்குதலால் அக்குற்றமும் மற்றைய முன் பின் மூன்று திருஷ்டாந்தங்களிலும் உள்ள சொற்களைக் கொண்டே பொருள்படுத்தும் இயல்புடனமைந்த பிரகரணத்தினிடையே இதற்கு வருவித்துப்பொருளுரைத்தலால் பிரகரணபங்கக்குற்றமும் பெற்றமையால் அஃது அவ்வறந்த சித்தாந்திக்கே அழகாம் என்று ஒதுக்குக. அரணிகளில் அக்கினியும் என்ற விடத்து (வ) என்றதை (உம்மைப்பொருளை)ச் சேர்த்தமையால் அபின்ன நிமித்தோபாதானவாதம் இதனால் ஏற்கப்பட்டதாயிற்று. இங்ஙனம் ஆத்துமாவிலாத்துமா உண்டாகின்றான் என்றது ஆன்மாவென்ற சோபாதிக [சைதன்னியத்தில் புதிதாய் உண்டாவது போற்காணப்படுகின்றது நிருபாதிகசைதன்னியமாம். திலத்திற்றைலம் இயல்பிலுளதே. தயிரிலும் நெய் அங்ஙனமே. அரணியிலக்கினியும், பிரவாகத்தில் நீரும் அங்ஙனமாமென்பது வெளிப்படை. இவற்றுள் அரணியிலக்கினி அதிகக்கடைதலையபேட்சிக்கும். அது மந்ததரபரிபாகிக்கு திருஷ்டாந்தம்; அதன் மேல் திலதைலம்; அது மந்தபரிபாகிக்கு திருஷ்டாந்தம்; அதன் மேல் தயிர்நெய்; தீவிரபரிபாகிக்கு அது திருஷ்டாந்தம்; அதன்மேல் பிரவாகத்தில் ஜலம்; அது தீவிரதர பரிபாகிக்கு திருஷ்டாந்தம். ஆயின் சிரவணமனன நிதித்தியாஸனாவஸ்தைகள் தில தைலம், தயிர் நெய், பிரவாக நீர் என்றதிருஷ்டாந்தங்களாற் காட்டப் பட்டதாயிற்று. பூர்வ மந்திரத்தில் அரணியக்கினி திருஷ்டாந்தம் சொல்லப்பட்டமையின், அதனையும் இங்கு சேர்த்தமைத்தாரென்க. வியவகாரத்தில் எள்ளில் எண்ணெய் உண்டாயது, தயிரில் நெய் உண்டாயது என்ற வழக்கம் இருத்தலால் இந்த ஆன்மா உண்டாகிறானென்பது; இதேவழக்கை: வித்ரூஷ்வா ப்ரஜேத, ஸோஹேஷவஸந் ஸோஹா

வெ௫தி, முக்தனே மீண்டும் முக்தி பெறுகிறான். பிரம்மமாயுள்ளவனே மறுபடியும் ப்ரம்மத்தை யடைகிறான் என்பனவாதியல வேதாந்த வாக்கியங்கள் கூறிநின்றன. சத்தியத்தாலும் தபசாலும் எவனதனை யறிவானென்றது ஆத்ம தர்சன சாதனத்தைக் குறித்தது. சத்தியம் தபம் என்ற இரண்டும் சாதனங்களாயினும் ஒன்றையொன்று சாதனமாய்க் கொண்டு நிற்பது. தவம் என்பது சாந்திராயணம் முதலிய காயகிலேச கர்மம். சத்தியம் என்பது ஆத்ம சொரூப ஞானம். தவத்தால் உண்டாய சித்த சுத்தி கொண்டு சத்தியமான ஞானம் பிறக்க அதனாலவனைப்பெறுவானென்றது. இதனால் ஞானகர்ம சமுச்சயமாதலும், கர்மமே மோட்ச சாதனமென்றதும் மறுக்கப்பட்டதாமென்க.

அவதரணிகை-

முன்மந்திரத்தில் ஜீவ பிரம்மபேதம் குறிக்கபபட்டமையின், அந்த ஜீவபிரமங்கள் ஒன்றாயின் பந்த மோட்சங்கள் எவருக்கென வினா நிகழ, அதனை மறுத்து அவனே சர்வகாரணனென்று குறிக்கின்றார்.

ஊர்ணநாபியதா தந்தூந் ஸ்ருஜதே ஸம்ஹ

ரதேபி। ஜாக்ரத்ஸ்வப்நே ததா ஜீவ: கச்சத்

யாகச்சதே புந:॥ என்று.

(இ—ள்.) சிலந்திப் பூச்சியானது நூல்களை எங்ஙனம் சிருஷ்டித்துத் தன்னுள் ஒடுக்கிக்கொள்ளுமோ, அங்ஙனம் ஜீவனும் ஜாக்கிரத் ஸ்வப்பனங்களில் போக்கு வரவு செய்கிறான்.

(வி—ரை.) முன்மந்திரத்தில் எங்கும் நிறைந்த ஏகனை தன்னியமாக நிரூபிக்கப்பட்ட ஆத்துமாவே சிலந்திப் பூச்சிபோல் நூல்களை யுண்டாக்குகின்றான். என்றதனால்; அப்பூச்சி, தன்னைத்தானே ஒருவாறு கட்டிக்கொள்ளுமியல் பினதாதலால், அதுபோலவே அனாதி பந்தமான்மாவுக் குண்டாயதெனவும், அது

மீண்டும் அந்நூலைத் தானே தன்னுடனடக்கிக் கொள்வது போலப் பந்தநிவிர்த்தியும், அவன் முயற்சியாற்றானே யமையுமென்பதும், இத்திருஷ்டாந்தப் பயனும். இதனால் ஆன்மாவிடத்தில் வேறு ஜாதியாய்த் தோன்றும் பிரபஞ்சம் தோன்றியதென்றதாயிற்று. சேதன ஜாதியும், ஜங்கம ஜாதியுமாயுள்ள சிலந்திப் பூச்சியிடம், நீர்ச் சாதியாகிய அதன் வாய்ச் சொள்ளினின்று தாவரஜாதியும், அசேதன ஜாதியும், நிலச்சாதியுமான நூல் உண்டாவது போல், சச்சிதானந்த சொரூபமான பிரமத்தினிடம் அசத்துமசித்து மனந்தமுமான விவ்வுலகம் உண்டாயது. நூல் உண்டாவதற்கு முன்னரும், உபசங்கரிக்கப்பட்ட பின்னரும் சிலந்தியே எஞ்சி நிற்பதால், அதனால் செய்யப்பட்ட பல நூல்களும் வேறு தேசகாலங்களில் அகப்படினும், அவை அதனிலும் வேறென வாராய்ந்தோர் ஒப்பாராயினும், தேசவேற்றுமை, காலவேற்றுமை, வஸ்து வேற்றுமைகளைப் பற்றி உற்பத்திக்குப்பின் உபசங்காரத்துக்கு முன் "சிலந்தி நூலைப் படைத்தது" சிலந்தி நூல் மண்டலத்தில் விளையாடுகின்றது; சிலந்தி நூலை ஒடுக்கிக்கொள்ளுகிறது; அந்நூற்கருவிகளைக்கொண்டு தன்னினமாகிய மற்றைய பூச்சிகளைப் பிடிக்கின்றது; பிரவிருத்தி தர்யத்தால் நூலைப் [illegible]த்துக் கீழே செல்லுகின்றது; நிவிர்த்திதர்மத்தால் நூலை ஒடுக்கிமேலே செல்லுகின்றது, தன்னிடமங்கிய நூலையே தானே படைத்துத் தன்னைக்கட்டிக்கொள்ளுகின்றது. தன்னாற் படைக்கப்பட்ட பலநூல்களில் ஒன்றையொன்று கட்டி வட்டம், முக்கோணம், நாற்கோணம் முதலிய பலவிதகாரியங்களையுண்டாக்குகின்றது; தான் சிருஷ்டித்த பெருநூல்வலையில் தானே சஞ்சரித்துப் பரமானந்த முறுகின்றது" என்பனவாதி பல வியவகாரங்கள் நிகழ்கின்றன; அங்ஙனமே சிருஷ்டிக்கு முன்னும் சம்ஹாரத்துக்குப்பின்னும் ஆன்ம சொரூபம் ஒன்றே உளதெனவும் எற்பட்டது. "[illegible]" என்பதாதிசுருதிகளும் இப்பொருளைக் கொண்டே முடிந்தனவென்க. சிருஷ்டியும் உபசங்காரமும் சிலந்திக்குத் தன்வசப்பட்டிருக்கவும், தான் தன்னூலாற் கட்டுப்படுவது, தன்னூலில் விளையாடுவது, இவையெலாம் நிகழ்வதுபோல, அனாதியிலான்மாவிடத்தே பந்த மமைந்த தென்றே சொல்ல வேண்டும். இப்பொருளைக் கொண்டே,

“யஸ்தந்துநாப இவ தந்துபி: ப்ரதாநஜை: ஸ்வபாவதோ வ்ருணோதி,” எங்ஙனம் சிலந்தி நூற்களால் கட்டிக் கொள்ளுமோ, அங்ஙனமே ஒரே தேவனாவரிக்கிறான்; என்றும், “ஸம்ஸாரபந்தஸ்திதிமோக்ஷஹேது:,” என்று பந்தத்துக்குமவனே காரணமெனவும், இதரோபனிடதங்களும் குறித்தனவாமென்க. சிலந்திதன்னூலாற் கட்டுண்டு துயருறவும், தன்னூற் படலத்தில் விளையாடிச் சுகமுறவும், வேறு நிமித்தத்தை எதிர்பாராது நிற்பது போல், ஆன்மாவும் சொபாவத்திறனே சொப்பனத்திலும் ஜாக்கிரத்திலும், தனக்குச் சுக துக்கங்களுக்கேற்பப் பிரபஞ்சத்தைக் கற்பித்துக் கொண்டானேயன்றி, வேறு நிமித்தத்தாலிது படைக்கப் பட்ட தன்றென்பதை, இத்திருஷ்டாந்த முகத்தாலிச்சுருதி நிரூபித்ததாமென்க. இதனால், சொப்பனபிரபஞ்சம் ஈசுவரனால் படைக்கப் பட்டதென்றும், அவை ஜாக்கிரத்துப்பிரபஞ்சம் போலொத்ததேயெனவும், கூறும்இதரர்வாதம் இச்சுருதியாலேமறுக்கபட்டதாம். அதுகொண்டே கைவல்யோபநிடதமும், பிருகதாரணியகோபநிடதமும் ஸ்பஷ்டமாய்ச் சொப்பனம் ஜீவசிருஷ்டமெனக் காட்டின. இங்கு ஜாக்கிர சொப்பனங்களிற் போக்குவரவு செய்யும் ஆன்மாவை ஜீவனென்றும் மற்றவிடம் ஆன்மாவென்றும் புருஷனென்றும் சொல்லியபடியால், அவஸ்தைகளிலகப்படாத சொரூபம் சுத்த சைதன்யமெனவும், அவ்வுபாதிப்பெற்று அச்சைதன்னியமே ஜீவனாமெனவும், ஏற்பட்டதன்றி யான்மாவுக்குப் பந்தமே ஜீவத்துவத்தை உண்டாக்கியதென்றும், சொல்லாதமைந்ததாம். ஆகலினான்மபேதம் கூறுவது சாஸ்திர சம்மதமன்றாம். ஜாக்கிரத்தில் போகிறானென்றும், சொப்பனத்தில் வருகிறானென்றும் சொன்னபடியால் ஸ்தூலசரீராபிமானமுள்ள அவஸ்தை முற்றும் பிரவிருத்தி ரூபமெனவும் அம்மட்டிலபிமானம் துலைந்து சூக்கும சரீராபிமானத்துடனிருக்கும் சொப்பனாவஸ்தை நிவிர்த்தி நிகழ்ச்சியென்றும் ஏற்பட்டது. அந்நிவிர்த்தி முதிர்ச்சியே சுழுத்தியாமென்றது சொல்லாதமையும். அதற்குத் திருஷ்டாந்தம் ஏதும் சம்பவியாதாகையால், மற்ற இரண்டவஸ்தைகட்கே சிலந்தி உபமானம் கூறியது. ஆக இவ்வவஸ்தைகள் அஞ்ஞானமயக்கத்தின் பயனாய் ஆன்

மாவைப் பந்தித் தனவென்பது இவ்வசனத்தின் முடிந்தகருத் தாம். சிலந்தி நூல்களுக்கு நிமித்தமும் உபாதானமுமாவதுபோல், ஆன்மாவும் உலகத்திற்கு நிமித் தமுமுபாதானமுமாம்; இவ்வி டத்தில் சிலந்தியினிடத்துச் சிருஷ்டியை ஆத்மனே பதத்தாலும் (தன்பொருட்டுச் செய்யும் தொழிலைக்குறிக்கும் வினைச்சொல் ஆத் மனேபதமாம்) ஆன்மாவிடத்து வரவைக்குறிக்கும் (உபசம் காரத்தை) ஆத்மனே பதத்தாலும், குறித்தலால் ஆன்மாக்களு க்கு இதமானது நிவிர்த்தியேயென்றும், மக்களுக்குக் கீழ்ச்சாதி களான சேதன ஜாதிகளுக்கு ப்ரவிர்த்தியே இதமாய்த்தோன்று மென்றும், ஏற்படுகிறது. மூலத்தில் ,,வொ நீ,, என்றசொல் இப்போக்குவரவுகள் மீண்டும் மீண்டும் உண்டா மெனக், குறித்தலால் அநாதிப் பிரவாக நித்தியம் இப்பிரபஞ்ச மென்பது விளங்கியது. ஈரவத்தைகளிலும் மேலானவவஸ்தைக ளில் ஆன்மா, தன்னாலிட்டிக்கப் பட்ட சரீரத்தையும் முற்றி லும் மறந்திடுவானாதலால், அதைத் திருஷ்டாந்த முகத் தாலெ டுத்துக் காட்டாது விட்டாரென்றேம். அவ்வவத்தைகள் ஓர் வ ழி ஆன்மாவுக்குண்டென, முன் நிரூபிக்கப் பட்டிருக் கின்றமை யால். அவை பிரபஞ்சப் பொருளைச் சேராதொழியாது; ஜாக் கிரத்தில் ஒருவனேயாயுள்ள ஜீவன், சொப்பனத்தில் பலசேத னசேதனவர்க்கங்களில் கலந்துநின்றாலும், ஒருவன் ஒருவனே யாய் நிற்றல் போல் ஜாக்கிரத்திலும் ஆராய்ந்துழி ஒருவனேயெ னக்குறித்தற்கே, ஜாக்கிரத்தையும் சொப்பனத்தையும் சேர்த் தாரென்க.

அவதரணிகை.

ஆயின் ஆன்மா, இரண்டவத்தைகளின்றி மற்றவவத்தை களையும் பெறுவதன்றோவெனநிகழும் சங்கையத்தொலைத்து, அவ் வவத்தைகளைக் கேட்போர் மதிவிளக்கத்துக்காக, அடுத்தமந்திரத் தாற் காட்டுகின்றார்.

,, நெதஸ்ஸம் ஜாமஸிகம்விஜ ஹாக ஸம்ஸெவூ நீ

ஸரீவிமெஸக | ஸாஷாத்ஹாஜயஸாத .

துரீயம் மூர்த்நி ஸம்ஸ்திதம்॥ என்று

(இ—ள்) ஜாக்கிரம் நேத்திரத்திலிருப்பதால் அறியவேண்டும். கண்டத்தில் சொப்பனத்தையடைவான். சுழுத்தி இருதயத்தில் உள்ளது. துரீயம் சிரசிலுள்ளது என்பது.

(வி—ரை) இங்கு அறிதலடைத லென்ற பிரவிர்த்தி நிவிர்த்திகளை ஜாக்ரத்ஸ்வப்பனங்களில் நிரூபித்து, மற்றைய சுழுப்தி; துரீயங்களில் ஏதும், தொழிலை நிரூபியாது விட்டமையால் நிஷ்கிரியாத்ம சொரூபம் அதிலுள்ளதென்றும், சைதன்னிய அபிவியக்திஸ்தான மாகிய இதயசஹஸ்ராரங்களில் அவ்விரவஸ்தைகளையும் காட்டினமையால், அவ்வவஸ்தைகளில் மற்றையஅவஸ்தைகளைக் காட்டினும் ஆன்மாவுக்குச் சொரூப சுகவிளக்கம் அதிகமாமென்றது சொல்லப்பட்டதாயிற்று. அற்றேல் துவக்கத்தில் நாபி, இதயம், கண்டம், சிரசு, என்று நான்கு ஸ்தானங்களை, ஜாக்கிரம், ஸ்வபனம், சுழுப்தி, துரீயம், என்ற நான்கவஸ்தைகளிலும், ஸ்தானங்களெனக் குறித்த இவ்வுபநிடதம், இறுதியில் நேத்திரம், கண்டம், இதயம், உச்சி, இவைகளை நான்கவஸ்தைகளுக்கும் முறையே ஸ்தானமெனக் குறித்தமையால், உபநிடதத்தின் உபக்கிரம உபசங்காரங்கள் முரணுமேவெனின், அற்றன்று; கண்ணில் என்றது, என்றும் காணும் தொழிலுள இந்திரியங்களெல்லாம் குறிப்பதாய்க்கொள்ளின், பித்தகோசத்தில் ஆன்மாசம்பந்தப்பட்ட காலத்தே, அவ்வவஸ்தை உண்டாமாதலின், முரணல் ஏதுமில்லையென்க. ஆதலாற்றான் துவக்கத்திற்கு நாபியென்னும் சொல்லுக்கு கொப்புளே பொருளாயினும் அது பித்தகோசபரமான ஆகுபெயரன்றோ?. "பித்தம் பக்த்யுஷ்ணதர்சநம்," என்று பித்தமானது பாகத்தையும் உஷ்ணத்தையும் அறிவையும் கொடுக்குமென் வாக்பட்டராதியோர் வயித்தியத்தில் குறித்தாராதலின், பித்தமென்றது பித்தகாரியமானதசேந்திரிய உணர்ச்சியின் பேரில் நின்றது. ஆயின், நேத்திரமென்ற சொல்லும், முதலிற் குறிக்கப்பட்டநாபி, நேத்திரம், பித்தம் இவைகளெல்லாம் ஒரு பொருட்கிளவிகளாயின. ஆகலின்குற்றமேதுமில்லை. ஜாக்கிரதவ

ஸ்தையில் மட்டும் "விஜ்ஞாய" அறியவேண்டும் என்ற சொல்லைப்போட்டு, மற்றவிடம் அச்சொல்லைச்சேர்க்காமையின்; வேதனம் என்றது அவ்வவஸ்தையிலேயே உளதாமென்க. இதனால், "அகாரம் ப்ரஹ்மாணம் நாபௌ, உகாரம் விஷ்ணும் ஹ்ருதயே, மகாரம் ருத்ரம் ப்ரூமத்யே, ஓங்காரம் ஸர்வேச்வரம் த்வாதசாந்தே," என்று அகாரமாகிய பிரம்மாவை நாபியிலும், உகாரமாகிய விட்டுணுவை இருதயத்திலும், மகாரமாகிய உருத்திரனைப்புருவநடுவிலும் ஓங்காரமாகிய சர்வேசுவரனைத் துவாதசாந்தத்திலும் தியானிக்க வேண்டுமென்ற இதர சுருதிகளும் ஆன்மாவிடத்தே உபசங்கரிக்கப்பட்டனவாம். மேலும் அச் சுருதியில் உருத்திரனைப்புருவநடுவில் நிரூபித்தது தவறுமேயெனின், சுழுத்தி ஸ்தானமாகிய உருத்திரனைப் புருவநடுவிற்குறித்தது அப்புருவநடுவிற் குறியாய்ப்பெற்ற அந்தர்லம்பிகா ஸ்தானத்தையேயாதலால் தவறில்லையென்க. அங்ஙனமாயினும் இங்குக்கண்டமென்றெடுக்கப்பட்ட அந்தர்லம்பிகா ஸ்தானம் சுழுத்தியபிமானியாகிய உருத்திரனெனப்படும் பிராஞ்ஞனது ஸ்தானமென உபக்கிரமித்ததற்கு விரோதமாய் இறுதியிற் கண்ட ஸ்தானத்தைச் சொப்பனஸ்தானமென்றது தவறாகாதோவெனின் கண்டம் இருதயங்களை சொப்பனசுழுத்திஸ்தானங்களாக மாற்றிச் சொல்வது அதிகாரிபேதத்திலொவ்வுமாகலாற்றவறாகாது. யோகிகளுக்கு லம்பிகையே சொப்பன ஸ்தானமாகும்; அஃதில்லாதார்க்கு இதயமேயாம். ஆதலாற்றான் சுச்ருதர் சாரீரத்தில் "தஸ்மிந்தமஸாவ்யாப்தே ப்ராணிந: ஸ்வபந்தி," இதயம் மலம் நிறைந்தால் பிராணிகள் தூங்குவார்கள் என்று சர்வ சாதாரணமாய்ச் சொப்பனத்தை இருதயத்தில் குறித்தார் ஆதலின், இங்கு உச்சியென்றெடுத்ததும், பிருமரந்திரம் முதல் துவாதசாந்தம்வரையிலென்க.

அவதரணிகை.

க்ஷேத்திரஞ்ஞசொரூபத்தை நிரூபிக்கவெழுந்து அதுவே சதுஷ்பாதத்துப் பிரம சொரூபமென விரித்து வந்த வுபநிடதம், ஆன்மாவிடத்துச்சமஸ்த சுருதிகளையுமுபசங்கரித்து, மற்றையவி

டதங்களில் பிரமமென்று நிர்த்தேசிக்கப்பட்டதுங் கூடசுத்தா
ன்மசொரூபமேயென்று விளக்குவதாய் உபசங்கரிக்கின்றது.

யதோவாசோநிவர்த்தந்தே | அப்ராப்ய
மனஸாஸஹ | ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் | ந பிபேதி
குதஶ்சந || என்று

(இ — ள்.) எதை மனதுடன் வாக்குகளடையா
தொழிந்திடும், அது ஜீவனது பரமானந்தமாம் எதனையறி
ந்த அறிஞன் முத்திபெறுவான்? என்றது.

(வி — ரை -) மனதுடன் வாக்குகள் செல்லாதென்றத
னால் மனம் ஒன்றே செல்லுமென்றும் அதுவும் அதைக்கண்டு
உடன் லயிக்குமென்றும் ஏற்பட்டது. மனதுடன் கலந்த வாக்
குகள் அதையடையாதே யொழியும், மனம் அதைக் கண்டொ
ழியும்; ஆகப்பலசுருதிகள் பிரமானந்தத்தை மனதாலறியலாமென
வும், மனதங்கு செல்லாதெனவும் இருவகை கூறியதும் ஒவ்வு
மென்க. இதனுற் சொற்களால் குறிக்கப்படும் ரூபங்களுளதும்
மனதால் பாவிக்கப்படும் வைபவங்களுளதும், கற்பிதமே
யாதலின்; அவை கட்கப்புறம் எவ்வளவைகளுக் குமகப்படாதது
ஸ்வானுபவைகவேத்யமாயுள்ள ஜீவனது நிருபாதிக சொரூபமா
கிய பரப்பிரமமாம் என்றதாயிற்று. ஜீவனது ஆனந்த மென்ற
தால ஜீவன் ஆனந்த துக்க உபயக்கூட்டுறவாலமைந்த சொரூப
மென்றும், அதனிடம் துக்காம்சமாகிய உபாதியொழிந்தால் எ
ஞ்சியது சுத்தானந்தமே யெனவும் பொருள்கொள்க. பிரமத்தி
னுனந்தமென்றவிடம் ராகுவின்தலை, பொம்மையின்சரீரம் என்
றவிடத்திலுள்ள ஆறும் வேற்றுமையைப் போல், அபேதத்தைக்
குறிப்பதாமென்க. எதையறிந்த அறிஞன் முத்திபெறுவான்?
என்றதை எதை அறிந்த அறிஞன் எங்கும் அச்சமுறுன்: என்று
தைத்திரீயோபநிடதம் படித்திருத்தலால் சர்வத்வைதபய நிவிர்
த்தியே மோட்சமென்றும், ஜீவப்ரம்ம பேதஞானமே பந்தமெ
ன்றுந் தெற்றெனவிளங்கியது, எதையறிந்த அறிஞன் முத்தி

பெறுவான் என்றவிடத்து அறிந்து அறிஞன் என்றது "கதிர
வனெதிர்ப்பட்டு மலர்ந்த கமலங்களை கமலங்கள், வாக்பூஷண
மேபூஷணம்," என்பதாதி பதங்களைப்போல, மற்றைய அறிவு
களெல்லாம் அறிவாவது ஒண்மை யெனக்குறித்து, முக்கிய
அறிவான சொரூப ஞானத்தைப் புகழ்ந்ததாதலின், அஃது கூறி
யது கூற்றாகாதென்க' சோதித்த ஸ்வசொரூப அறிவின் முதிர்ச்
சியே மோட்சரூபமாயிருக்க அறிந்து முத்திபெறுவான் என்று
அறிதற்கும் காரிய காரணபாவம் காட்டி காலவேற்றுமை குறித்த
தவறேயெனின் "நீரைவிட்டு நனைத்தான், தீபத்தைக்கொண
ர்ந்திருட்போக்கினான்" என்பதாதி இடங்களைப்போல் கொள்ள
காரிய காரணபாவம் கொள்க. அறிஞனே முக்தி பெறுவான் எ
ன்றதால் நித்தியமுக்த ஸ்வபாவனான ஆன்மாவுக்கு முக்திபுதி
தாய்வருவது போலுபசரிக்கப்படுமென்பதே பொருளாகின்றது
'ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி' 'விமுக்தஶ்ச விமுச்யதே'
பிரம்மமாயுள்ளவன் பிரமத்தைப் பெறுகிறான் என்பதாதி பலவே
தாந்த வாக்கியங்களை இஃது உபசங்கரித்ததாமென்க.

அவதரணிகை.

அச்சித்தான்ம சொரூப விஞ்ஞானம் எத்தன்மைத்தென்ச்
சீடர்க்குண்டாகும் ஆசங்கையை விளக்கி எடுத்த உபாஸ்தியை
சுருக்கி உபசங்கரிக்கின்றார்.

" ஸர்வவ்யாபிநமாத்மாநம் க்ஷீரே ஸர்பிரி
வார்பிதம் | ஆத்மவித்யாதபோமூலம் தத்ப்ர
ஹ்மோபநிஷத்பரம் || தத்ப்ரஹ்மோபநி
ஷத்பரமிதி ||

(இ — ள்.) பாலில் நெய் அமைந்திருப்பதுபோல்
எங்கும் நிறைந்து ஆத்மவித்தியாதபங்களை மூலமாய்க்
கொண்ட அதுவே, பிரம்மோபநிஷத்பதமாம் என்றது.

(வி — ரை.) பாலில் நெய்போல் என்ற விஷயம் முன்
னரே குறிக்கப்பட்டமையின் இலட்சணத்துடன் ஆன்மாவை தி
யானிப்பதே பிரம்மத்தை யடையும் வழியாம் என்பதாயிற்று.

ஆத்மவித்தை என்றது சத்தியம்; அதுவும் தவமுமே ஆத்மதரிசன காரணமாதலின், ஆத்ம வித்யாதவங்களை மூலமாய்க்கொண்டது பிரும்மஞ்ஞானம் என்பதாயிற்று. அதுவே பிரும்மோபநிஷத் பதமெனப்பட்டது. உபநிஷத் என்னும் சொல் அதி சமீபத்தில் செல்வதென்ற காரணப்பொருளையும் கொடுத்து ஈசம் முதலிய வேதாந்தங்களுக்குக் குறியாகவும் நிற்கும். ஆயின் பிரம்மத்திற்கு சமீபம் செல்வது பிரமோபநிடதமாம். அஃது இதுவேயாம். இச்சொல் இதற்கு இடுகுறியாம் எதுவரை சொற்களால் பிரமசொரூபம் விளங்குமோ அதுவரைநெருங்கிச் சென்றதிது வென்றது முடிந்தகருத்து. அதனையேபதமாய்க்குறிக்கும் சொல்லாய்ப் பெற்றது பிரம்மோபநிஷத்பதமாம். ஆயின் இச்சொல் அன்மொழித் தொகை. ஆயின் பிரமோபநிடதத்திற் குறிக்கப்பட்ட சார்வாத்மியோபாஸ்தியே மோக்ஷ சாதகமென்றும், அது ஒன்றே கைவல்யசித்தியைக் கொடுக்குமென்றும் பேதவாசனையொழியாதவரை பலகோடி சம்ஸ்காரங்களாலும் அனந்த யோகாதிகளாலும், முக்தி கைகூடாதென்பதும் முரசுமுழங்கிய சித்தாந்தமாம். ஈற்றடியை இருமுறை கூறியது கிரந்தத் திறுதியைக் குறிக்க. இங்குபதமென்ற சொல்பிரணவத்தைக்குறிக்கும் சொல்லாகையினால் பூர்த்தியால் மங்களமாம் 'ஓம் கார

[illegible] | [illegible]

[illegible]' என்று பலபிரமாணங்களால் ஓங்காரம், அதசப்தம் இவை பரமமங்களமாதலின் அவற்றில் அத என்னும் சொல்லை முதலிலெடுத்து, பிரணவக்குறியை இறுதியில் வைத்து வெளிவந்த இவ்வுபநிடதம், பரப்பிரம்மவாத விஜயடிண்டிம கோலாகலத்திலோர் சிறிதாமெனப், பிறப்பிலியெம்பிரான், பிறைசூடிநாதன் திருவடித்தாமரைகளில் ஓம் மறைமுடித்திருவுரைச் சிறுபில் வத்தளிரையளித்திட்டு அகமகிழ்ந்தாமென்க. சுபம். சுபம்.

பரசமய பஞ்சானன பண்டித பாஞ்சசன்னிய பிரம்மஸ்ரீ

ஸ்ரீ ஸ்ரீநிவாச தீட்சிதர் அவர்கள் இயற்றிய

உபநிடதவுரை முற்றிற்று.

பிரம உபநிடததாத்பரியசங்கிரகம்

இவ்வுபநிடதம் பிரணவ வித்தை அட்சரவித்தைகளை நிரூபிக்கின்றது. 108 உபநிடதங்களுக்குள் 4- பிரம்மோப நிடதங்களுண்டு. அவற்றுக்கு வேற்றுமை தெரியவேண்டி பிரம்மோபநிடதம், பரப்ரம்மோபநிடதம் பஞ்சபிரம்மோபநிடதம், பாசுபத பிரமோப நிடதமெனப்பெயரிட்டிருக்கிறார்கள், இதில்பிரம் மோபநிடதமும், பஞ்சப்பிரம்மோபநிடதமும் யஜுர்வேதத்திலுள்ளன. பாசுபத பிரம்மோபநிடதமும்,பரப்பிரமோபநிடதமும்அதர்வணவேதத்திலுள்ளன. அதர்வண வேதத்திலுள்ள உபநிடதங்களுக்குப் பாஷியங்கள் செய்த பட்ட நாராயணர், அதர்வண சாகையிலுள்ள பாடத்தையே அனுசரித்து வியாக்கியானம் செய்தார். ஆகலின், அஷ்டோத்தரசதோபநிஷத் கோசங்களிலகப்பட்டாத அதிகபாடங்கள் இவ்வுபநிடத்திற் சேர்ந்த அதர்வண வேதத்திலுள்ள பாசுபத பிரம்மோபநிடதத்தில் சற்றேறக்குறைய இவ்வதிகபாடவாக்கியங்களெல்லாம் காணப்படுகின்றன. அதன் பொருத்தத்தை அங்கே காணலாம். யஜுர்வேதம். பஞ்ச பிரம்ம மந்திரங்களைத் தம்முன்னேற்றப்பெற்ற நாராயணோபநிஷத்தை இறுதியில் தைத்திரீய சாகையிற் பெற்றமைபோல் அதே பஞ்சபிரும்ம சொரூப நிருபணம் செய்யும் உபநிடதங்கள் பிரம்மசாகையிலும் உள்ளனவாம் அவற்றுள், இஃதொன்று. இந்நான்கு பிரம்மோபநிடதங்களும் க்ஷேத்திரஞ்ஞசொரூபத்தை நிரூபித்து ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரீயம், துரீயாதீத மென்ற அவஸ்தைகளை நிரூபித்து அத்துரீயாதீதநிலையிலும், அதற்கப்புறமும் ஏகரசாகண்டாத்வைதவஸ்துவே உள்ளதுவும், ஜடஜீவேசுவரப் பிரபஞ்சங்கள் அதனிடத்தே கற்பிதமாமெனவும், அக்கற்பனுமய உபாதிகள்தொலைந்தால் என்றும் உள்ளது ஒப்புயர்வற்ற ஒன்றேயெனவும், அதுவே அன்பர் அகமகிழ்ந்து வழிபட்டு, ஆத்மானந்த மடைந்துய்யுமாறு, அருட்டிருமேனி கொண்டம்புலிசூடிய பிரானாய் எழுந்தருளி,மூவவஸ்தைகளுக்கபிமானியான விசுவன், தைஜஸன், பிராஞ்ஞன், என ஜீவர்களுக்கும் மேலான துரீய சிவமென்று

மாண்டூக்கியங் கூறியதுபோல நிற்கும், பிரம்மவிஷ்ணு உருத்திரர்களுக்கு நியந்தாவான சதாசிவமூர்த்தியாமெனவும், அதனைவழிபடுவதும் வேதோக்த வர்ணாசிரமாசாரங்களாலும், சத்கர்ம்மாகிய பரசிவாராதன யோகாதிகளாலும் கூடுமெனவும், அதற்கங்கம் யஞ்ஞோபவீதமாமெனவும், அதன்சொரூபம் இத்தன்மைத்தெனவும், பரபிரம்மோபதேசத்திற்கு சர்வகர்மசன்னியாசமோரங்கமாமெனவும், அச்சன்னியாசமும் இவ்வித்தன்மைத்தெனவும்; அச்சன்னியாசிகள் ஆத்மானுசந்தானம் செய்யவேண்டியமுறை, பிரணவாதி சாதனங்களைக் கொண்டேயாமெனவும், அவ்வழிபாடும் திலதைலாதி திருஷ்டாந்தங்களாலெனவும், அவற்றாலும் மந்ததர, மந்த, தீவிர, தீவிரதர, பரிபாகங்களுக்கேற்றவாறு வேறுபடுமெனவும், எவ்வழிபாட்டிலும் ஈசன் உலகவிவர்த்த காரணமெனக் கொண்டு, அவனிடத்திலத் தியசிக்கப்பட்ட சமஸ்தகாரியங்களையும் காரணநோக்கால்பரிசீலித்து பரமகாரணப் பொருளையறிந்து அவ்வழியே இடையறாது நிட்டைகூடலே மிகசிரேஷ்டமாமெனவும், காரணத்துட்காரியங்கள் கற்பிதமேயாமெனவும்; ஆன்மசொரூபபேதம் சத்தியமாமெனவும் சொரூபானந்த மாத்திரையாய்நிற்றலே மோக்ஷபதார்த்தமாமெனவும்; ஒவ்வொரு பகுதியில் ஒன்றுசுருங்கியும் விரிந்தும் நிரூபித்துவருகின்றன. ஆயின், இப்பரமோபநிடதம் நான்குஸ்தானங்களில் பிரம்மா விஷ்ணுருத்திர, ஈசுரர்களைத்தியானிக்கும்படி எடுத்துக்காட்டி அதுஉண்மையில் நிருபாதிகசொரூபமென, நிரூபித்துதியானஸ்தானத்தையும்' தியாநாதிகாரயஞ்ஞோபவீதத்தையும்; சன்னியாசத்தையும், நிரூபித்து, அப்பரவஸ்துவின் சகுண நிர்க்குண சொரூபங்களையும், அவனைவழிபடும் மார்க்கத்தையும் விரித்ததாம் இதனிடத்தில் மாயோபாதிகனைப், பிரும்மாண்டத்தை தன்சரீரமாய்ப்பெற்ற விராட்டுக்கு, நாபி, இருதயம், கண்டம், உச்சிகளாக பாவிக்கப்பட்ட ஸ்தானங்களில் ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரீயம் என்றவவஸ்தைகளுக்குப்பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், அட்சரனென்ற நான்கு மூர்த்திகளைக்காட்டி, அதற்கிணையாய்ப் பிண்டத்தில் மூவவஸ்தைகளுக்கும் துரீயத்திற்கும், விச்வன், தைஜஸன், பிராஞ்ஞன், ஸாக்ஷி இவர்களை சொரூபமாகக் கொள்ள வேண்டுமென்றும், இவ்விரண்டுபாதைகளையும் விலக்கி

ஸ சொரூபமே பிரம்மமென்றும் நிரூபிக்கப்பட்டது. ஆகலின், இவ்வுபநிடதம் அறுவகைத் தாத்பரியக்குறியீடுகளால் சுத்தாத்வைதபரமாகின்றது. வருமாறு—

1. ஸதூாவஸ]ூ்ா „ என்ற வுபக்கிரம மந்திரமும், ஐூநது ஜெதஜ்ஜீவஸ]ூ்’ என்ற உபசங்கார மந்திரமும், ஒருங்குசேர்ந்து ஜீவப் பிரம்மாபேதத்தைக் காட்டுகின்றன.

உ. „ ஜாமஸிதெ ஸ]ூஹூா ” „ ஸாகூவெதா கெவ ஸொ நிமுணஸ]ூ ” “ ஜாஹ ஸஷ வெ தயாஜீவஃ ” என்ற வசனங்கள் அத்தாத்பரியத்தை வற்புறுத்துமப் பியாசங்களாம்.

3. இவ்வித ஜீவப்பிரும்மைக்கியம் பிரத்தியட்சம் முதலிய மற்ற அளவைகளாலகப் படாமையின் அபூர்வதை யுண்டென்க.

4. “ உ-வ]ூெதவ-யஃ ” என்பது பலநிர்த்தேசமாம். (பயனைக்குறித்ததாம்)

5. இதற்கர்த்தவாதங்கள் “ ஸ-உது-ஜைதமு-துசெயஷாம்’ முதலியன.

6. உபபத்திகள் “ திரெவஷ-ரெதஜஂ” “ ஊண-நா ஸிர]ூயா-தஂ க-ஙு ” முதலியனவாம். ஆக இவ்வாறுவகைக் குறியீடுகளாலும் இவ்வுபநிடதம் கேவலம் அத்வைத பரமாம். எல்லாச்சாகைகளையும் ஒருங்குசேர்த்துப் பொருள் படுத்த வேண்டு முறைபற்றி மற்றைய பிரம்மோப நிடதங்களிலுமுள்ள விசேஷத்தையும் கலந்து பொருள் கொள்ளின், இது, சிவாத்வைதபரமாமென்க. மாண்டூக்யம், பிருஹதாரணியகம் முதலிய பலவுபநிடதங்களில் நிரூபிக்கப்பட்ட அட்சரவித்தை, பிரணவ வித்தைமுதலியவைகளும், இதனுளுப சங்கரிக்கப்பட்டனவாம். சுபம்.

சம்பூர்ணம்.

ப்ரம்மோபநிஷத்தின் அரும்பதவிளக்கம்

𑌅

𑌅𑌕𑍍𑌷𑌰𑌂—பிரம்மம், ஜீவன், சொல்.

𑌅𑌕𑍍𑌷𑌰𑌃—ஜீவன், ஈசுவரன்.

𑌅𑌗𑍍𑌰𑍍𑌯𑌂—முதலிலுண்டானது, சிறந்தது.

𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌃—ஆவர்த்தி, வழக்கம்.

𑌅𑌰𑌣𑌿𑌃—அக்கினியை உண்டாக்கும் ஓர்வகைக்கட்டை.

𑌆

𑌆𑌤𑍍𑌮𑌾—ஜீவன், பரமாத்மா, சைதன்னியமாத்திரம்.

𑌈

𑌈𑌶𑍍𑌵𑌰𑌃—மாயேரபாதிகன், சிவன்.

𑌉

𑌉𑌤𑍍𑌤𑌰𑌾𑌰𑌣𑌿𑌃—அரணியைக்கடையஉள்ளன்றும்கோல்.

𑌉𑌪𑌨𑌿𑌷𑌤𑍍—பிரம்மத்தை பிரதிபாதனம்செய்யும்சொற்றொகுதி.

𑌉𑌪𑌵𑍀𑌤𑌂—தேவகாரியத்தில்இடதுதோள்முதல்வலதுதோள்வரையில்தொங்கும் நூல்.

𑌊

𑌊𑌰𑍍𑌣𑌨𑌾𑌭𑌿𑌃—சிலந்தி, பட்டுப்பூச்சி.

𑌋

𑌋𑌷𑌯𑌃—ரிஷிகள், வேதவாக்கியங்கள்.

𑌏

𑌏𑌕𑌃—ஒருவன். சகாயமற்றவன், இணையில்லாதான்,

க

கண்டம்—லம்பிகாஸ்தானம், புருவத்தின்நடு, கழுத்து.

கர்மாத்யக்ஷ꞉—கர்மபலனை கொடுப்பவன், சன்னிதானமாத்திரையில் கர்மத்தை நடத்துபவன்.

கேஶதாரிண꞉—சிகையுள்ளோர்கள்; பிரயோஜனமில்லாதவர்கள்.

க₃

கூ₃ட₄꞉—மறைந்திருப்பவன்.

ஜ

ஜீவ꞉—அந்தக்கரண உபாதியுள்ள சைதன்னியம்.

ஜ்யோதி꞉—பிரகாசம், இருளுக்கு எதிர்மறைத்தன்மையுள்ளது.

த

தத்த்வத₃ர்ஶிவான்—உண்மையை ஆராய்வோன்; உண்மையைக்கண்டவன்.

தப꞉—தவம், கிருச்சிரசாந்திராணயஞ்ஞாதிகர்மங்கள், மந்திரஜபயோகமுதலியன,

த்ரிவ்ருத்...மூன்றாயமைந்தது.

தேஜ꞉—சோதி.

த₄

தீ₄ரா꞉—ஆராய்ச்சியுள்ளபண்டிதர், உலகத்தைவென்றவர்.

த்₄யானம்—மனனமும் நிதித்தியாசனமும்.

ந

நாபி₄꞉—கொப்புள், பித்தகோசம், இந்திரியங்கள்.

நிர்மந்த₂னம்—கடைதல், ஆலோசித்தல்.

நிர்வாணம்—மோட்சம், சுகமாத்திரம்.

நிர்கு₃ண꞉—குணசம்பந்தமில்லாதவன், குணங்களைக்கடந்தவன்,

நேத்ரம்—கண், இந்திரியங்கள்.

ப

பதம்—சொல். பிரணவம்.

பரப்ரஹ்ம—நிருபாதிகசைதனியம்,

ப்ரணவம்—ஓங்காரம், பரமேசுவரன்.

பிதர:—பிதுருதேவதைகள்.

புருஷ:—ஆன்மா, ஜீவன், சரீரம்.

ப்ராணா:—பிராணங்கள், பிராணாபிமானருந்திரர்கள்.

பரம்—மாயயைக்கடந்தது, சிறந்தது.

பவித்ரம்—புண்ணியமானது, பாவத்தைத்தொலைத்தது.

பராயணம்—முக்கியமானஇடம், ஒடுங்குமிடம்-

ப்ர

ப்ரஹ்மா—பிராமணன், சதுர்முகன், பரமேசுவரன்.

ப்ராஜ்ஞ:—அறிஞன், பிரமநிட்டன்-

மூ

மூர்த்தா—உச்சி, துவாதசாந்தம், பிரம்மரந்திரம், சகஸ்ரதள கமலம்

ய

யஜ்ஞா:—கர்மங்கள்.

யஜ்ஞோபவீதம்—யஞ்ஞாதிகாரத்துக்காகதரிக்கும்நூல்-

யோகீ—சொரூபஞானமுள்ளவன்; சாதனசதுட்டயம் பெற்றவன்,

யஜ்வா—கர்மத்தையனுட்டிப்பவன்

ர

ருத்ர:—துரீயமூர்த்தி, சங்காரருத்திரன்

ரூபம்—அமைப்பு, கருமைமுதலியன-

லோ

லோகா: உலகங்கள்; திருசியப்பொருள்கள்ஜனங்கள்;

வ

விஷ்ணு: சத்வகுணோபாதிகன், சொப்பனதேவதை.
வஶீ சொதந்திரன். இச்சாசக்தியுள்ளவன்
வித்யா அறிவு, பிரமவித்தை
வேதா: வேதங்கள், ஞானசாஸ்திரங்கள்
விப்ர: மேதாவீ; பிராமணன்.
வித்வாந் பிரமநிட்டன்; பண்டிதன்;
வைதிக: வேதோக்த கர்மங்கள் செய்பவன், வேதத்திற் சொல்லபட்டது

ஶ

ஶ்ரமண: விருதமுள்ளவன்,
ஶிகா கர்மாங்கமானகேசங்கள் நுனி
ஶிகீ சிகையையுடையவன். அக்கினி.
ஶுப்ரம் தூய்மையுள்ளது.

ஸ

ஸர்வவித்யா: எல்லாவித்தைகளுமுடையவன், எல்லாவற்றுலுமறியத்தக்கவன்
ஸத்யம் உண்மை, பிரும்மம்.
ஸர்வவ்யாபீ எங்கும்நிறைந்தவன். சர்வசொரூபனுயுள்ளவன்
ஸர்வபூதாந்தராத்மா எல்லாவற்றிற்குமந்தர்யாமி, எல்லாச்சொரூபனுயுள்ளவன்
ஸர்வபூதாதிவாஸ: எல்லாப்பூதங்களுக்குமிருப்பிடம் எல்லாப்பூதங்களிலுமுள்ளவன்.
ஸாக்ஷீ துரீயாவஸ்தாபிமானஜீவன், அவஸ்தாதீதப்பொருள்.

ஸௌஷுப்தம் சுழுப்தி.

ஸூத்ரம் குறி. நூல்

ஸ்ரோத꞉ பிரவாகம்-நெகிழ்ச்சியுள்ளபொருள்-

ஹ

ஹ்ருதயம். மார்பு, தியானயோக்யமான சென்னிறமுள்ள மாம்சபிண்டம்-

ப்ரம்மோபநிடதத்தின் அரும் பதவிளக்கம்

முற்றிற்று.

பிழைதிருத்தம்

மூலம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௨	௯	கூநஃ	கூநூ
ஷை	௧௪	ணொா	ணொ
ஷை	௧௭	ஹிவா	ஹிஂவா
		வியாகர்யானம்	
3	23	யேம்	யேம
5	11	பொருளனே	பொருளனே்
ஷை	12	சங்ஙைநிக	சங்கைநி
ஷை	26	அனெ	அனே்
ஷை	30	விசாரணைர	விசாரணை்
ஷை	30	ந்தது	ழிந்தது
5	6	மூர்திச	மூர்த்திக
7	16	ண்ய	ரண்ய
ஷை	26	பட்டினு	படினு
ஷை	29	காஸ்பாணி	காணபாணி
8	27	மேற்ப்ப	மேற்ப
9	9	வேறுலித	வேறுவித்
ஷை	26	குழநலையங்	குழநயைக்
10	2	போருனே	பொருனே்
11	6	பெருளாதற	பொருளாதல்
ஷை	10	சபன	சபள
ஷை	15	அந்தயர்ா	அந்தர்யா
15	9	அந்துவே	அதுவே
ஷை	23	சுப்பர்	சுப்ர
24	27	காம	கர்ம
17	16	சும்	ரம்
25	26	மெகின்ருர்	மென்கிருர்

சீரயி

உபநிஷத்வித்தியா

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
23	1௫	கன்மய்கது	கன்மங்க
ஷை	21	ௌன்	என்
24	27	ஆதுனிகி	ஆதுநி
25	11	ஞோப்வி	ஞோபவீ
29	†2	தேவனௌ	தேவனே
ஷை	14	ங்களை	தங்களை
௩0	7	யெவ்	எவ்
ஷை	13	கலெஸ்	களெல்
31	3	சொல்லால்	சொல்லால்
ஷை	16	சொன்னது	சொன்னது
ஷை	29	ஆகாகம்	ஆகாசம்
௩1	15	பரெ	ப்பெற
35	24	த்விற	தவிர

Po.N. Parasuraman